Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

இன்றைய நாகரிகம்! நாளைய நாகரிகம்!

மகாராசி சில்க்ஸ்

மங்கல நிகழ்வுகளுக்கு மகாராசியான ஸ்தாபனம்

மகாராசி சில்க்ஸ்

59, நவீனசந்தை உட்புறம், யாழ்ப்பாணம்.

T.P.No : 0777286247.

(சி/2203)

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆடி 20 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ஜ.ஆகிர் 16 (04.08.2004) புதன்கிழமை இதழ்:306

# இடைக்கால நிர்வாகம் குறித்து பேச தயாரென ஒருபோதும் கூறவில்லை!

## ஜனாதிபதி சந்திரிகா மீண்டும் குத்துக்கரணம்



(கொழும்பு)

**தாம் ஒருபோதும் தமிழீழ விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையை அடிப்படையாக வைத்துப் பேச்சுவார்த்தைகளை நடத்தப்போவதாகக் கூறவில்லையென ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மீண்டும் தெரிவித்துள்ளார்.**

**நேற்று முன்தினம் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நிறைவேற்றுக் குழுக்கூட்டம், ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.**

ஜனாதிபதி சந்திரிகா தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையை ஆரம்பித்தால், அடுத்த கணமே தமது கட்சி அரசாங்கத்தில் இருந்து வெளியேறுமென ஜே.வி.பியின் பிரசார செயலர் விமல் வீரவன்ச குறிப்பிட்டமை தொடர்பாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த நிறைவேற்றுக்குழு உறுப்பினர்கள் இந்தக் கூட்டத்தில் பிரச்சினையை எழுப்பினர்.

இதற்குப் பதிலளித்த ஜே.வி.பியினர் - இடைக்கால நிர்வாகம் குறித்து அரசாங்கத்தின் அமைச்சர்கள் சிலர் தெரிவித்த கருத்துக்களுக்கும், நோர்வே (12 ஆம் பக்கம் பார்க்க)

## பாலியல் பலாத்காரத்தில் ஈடுபட எத்தனித்த கடற்படைச் சிப்பாய்!

(காரைநகர்)

காரைநகர் - வலந்தலையில் இளம் கர்ப்பிணிப் பெண் ஒருவர் மீது பாலியல் பலாத்கார முயற்சியில் ஈடுபட்ட கடற்படைச்சிப்பாய் - அந்தப் பெண் கூக்குரலிடவே தப்பிச் சென்றார்.

நேற்று அதிகாலை 2 மணியளவில் கணவனும் - மனைவியும் உறக்கத்தில் இருந்தவேளை - வீட்டினுள் புகுந்த கடற்படைச் சிப்பாய் உறக்கத்திலிருந்த கர்ப்பிணிப் பெண்ணை பாலியல் பலாத்கார முயற்சியில் ஈடுபட எத்தனித்தவேளை -

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இருபாலையில் கன்ரர் மோதி சைக்கிளில் சென்றவர் பலி!

(யாழ்ப்பாணம்)

யாழ். - பருத்தித்துறை வீதியில் இருபாலை மாதா கோவிலடியில் இடம்பெற்ற கன்ரர் - சைக்கிள் விபத்தில் ஆணொருவர் தலை சிதறிப் பலியானார்.



கோப்பாய் தெற்கைச் சேர்ந்த 42 வயதுடைய பூதப்பிள்ளை நாகரத்தினம் என்பவரே இந்தச் சம்பவத்தில் பலியானவராவார்.

நேற்று மாலை 2.00 மணியளவில் இருபாலைப் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது -

குறிப்பிட்ட நபர் கோப்பாயிலிருந்து இருபாலை நோக்கி சென்று கொண்டிருந்தார். அச்சமயம் எதிரேவந்த வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸுக்கு வழிவிடுவதற்காக - வீதியோரமாக கன்ரரை சாரதி செலுத்தினார். இதன்போது முன்னே சைக்கிளில் சென்றுகொண்டிருந்தவரை கன்ரர் மோதி விழுத்தியது.

நிலத்தில் வீழ்ந்த கன்ரரின் மேல் மணலுடன் வந்த கன்ரர் ஏறியதால் அவர் ஸ்தலத்திலேயே தலை சிதறிப் பலியானார்.

பலியான நபரது மண்டை ஓடு மற்றும் மூளை ஆகியன தெருவோரத்தில் சிதறிக்கிடந்தன.

சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு வந்த யாழ். மாவட்ட நீதிவான் ஆர்.ரி.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அரசாங்கத்தின் போக்கில் அதிருப்தி

# பேச்சுக்கான ஆதரவை ஐ.தே.கட்சி விலக்கியது!

## ரணில் விக்கிரமசிங்க அறிவிப்பு



(கொழும்பு)

**இடைக்கால நிர்வாகசபை அடிப்படையில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் சமாதானப் பேச்சுக்களை நடத்த முன்வந்தால் அதற்கு தமது கட்சி வழங்குவதாகத் தெரிவித்த ஆதரவை -**

**ஆளும் கட்சியினர் தெரிவித்த கருத்துக்களால் விலக்கிக் கொள்ளப்போவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார்.**

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்றக் குழுக கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்து வெளியிடுகையில் -

அமைச்சர் அனுரா பண்டார நாயக்கவும் ஜே.வி.பியும் - ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவு தேவையில்லை எனத் தெரிவித்ததுடன், பல்வேறு குற்றச்சாட்டுக்களை தமது கட்சி மீது சுமத்தியதன் காரணமாகவே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கிறது.

விடுதலைப் புலிகள் முன்வைத் (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.டி.பி. அலுவலகத்தின் மீது வாழைச்சேனையில் தாக்குதல்!

### பொலிஸார் ஒருவர் உட்பட ஐவர் காயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வாழைச்சேனை நகரில் - ஈ.பி.டி.பி. அலுவலகம் மீது நேற்றுக்காலை அடுத்தடுத்து நடத்தப்பட்ட கிரனைட் தாக்குதலில் நான்கு ஈ.பி.டி.பியினரும் ஒரு பொலிஸ் கொன்ஸ்டபிளும் காயமடைந்தனர்.

நேற்றுக்காலை 7.30 மணியளவில் இடம்பெற்ற இந்தத் தாக்குதல் குறித்து மேலும் தெரியவருவதாவது -

வாழைச்சேனை மீன்பிடித்துறை இராணுவ முகாமருகே உள்ள ஈ.பி.டி.பி. அலுவலகம் மீது கிரனைட் லோஞ்சர் மூலம் தாக்குதல் நடத்தப்பட்டது.

எம்.203 ரக ரைபிள் கிரனைட் மற்றும் டொங்கான் கிரனைட் லோஞ்சர் ஆகியவற்றைப் பயன்படுத்தியே இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இதில் ஒரு கிரனைட் அலுவலகத்தில் வீழ்ந்து வெடித்தது. மற்றையது இலக்குத் தவறி - வெளிப்புறச் சுவரருகே வீழ்ந்து வெடித்தது என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதலில் நான்கு ஈ.பி.டி.பியினரும், அலுவலகத்தில் பாதுகாப்பில் ஈடுபட்டிருந்த பொலிஸ் கொன்ஸ்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பொறுப்புக்களை மீள வழங்க ஜனாதிபதி இணக்கம்

(கொழும்பு)

ஜே.வி.பி வசமுள்ள விவசாயத்துறை அமைச்சில் இருந்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் பொறுப்பேற்கப்பட்ட சில விடயங்களை மீண்டும் அந்த அமைச்சிடமே ஒப்படைக்க ஜனாதிபதி சந்திரிகா இணக்கம் தெரிவித்துள்ளார்.

அண்மையில் இந்த அமைச்சின் இரண்டு திணைக்களங்களின் 5 பிரி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## எவரும் குழம்பத் தேவையில்லை

# அனைத்து பட்டதாரிகளுக்கும் நியமனம் நிதியமைச்சர் சரத் அமுனுகம தெரிவிப்பு!

(யாழ்ப்பாணம்)

நாட்டிலுள்ள அனைத்து வேலையற்ற பட்டதாரிகளுக்கும் அரசாங்க வேலைவாய்ப்பு நியமனங்கள் வழங்கப்படுமென நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்தார்.

வேலையற்ற பட்டதாரிகளை அரச சேவையில் இணைத்துக்கொள்வது தொடர்பாக கடந்த வாரம் வெளியிடப்பட்ட பெயர்ப்பட்டியல்களில் முறைகேடுகள் காணப்படுவதாக, வேலையற்ற பட்டதாரிகளால் யாழ். மாவட்ட கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு முறையிடப்பட்டிருந்தது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

எக்ஸ்போ எயார்
வான்வெளியில் உங்கள் நண்பன்...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

EXPOAIR
Your friend in the skies...

# தென்மராட்சி கோட்டப் பாடசாலைகளின் தமிழ் மொழித்தின போட்டி முடிவுகள்

(தென்மராட்சி)

தென்மராட்சிக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட தமிழ் மொழித்தினப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்களின் பெயர் விபரத்தின் நேற்றைய தொடர்ச்சி வருமாறு:

**பிரிவு-V**

**கவிதை ஆக்கம்**

முதலாம் இடம் - சி.சிவரூபன் (மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி).

இரண்டாம் இடம் - க.கனகாம்பிகை (சாவகச்சேரி மகளிர் கல்லூரி).

மூன்றாம் இடம் - க.அரிசோபா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி).

**பிரிவு-IV**

**சிறுகதை ஆக்கம்**

முதலாம் இடம் - இ.சாருகா (மீசாலை விக்னேஸ்வரா ம.வி).

இரண்டாம் இடம் - வி.தாட்சாயணி (கொடிகாமம் திருநாவுக்கரசு).

மூன்றாம் இடம் - சு.சரணியா (சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி).

**பிரிவு-V**

**சிறுகதை ஆக்கம்**

முதலாம் இடம் - பா.உஷாநந்தினி (கொடிகாமம் திருநாவுக்கரசு).

இரண்டாம் இடம் - ச.லாவண்யா (சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி).

மூன்றாம் இடம் - கு.சரிதா (சாவகச்சேரி மகளிர் கல்லூரி).

**பிரிவு-1**

**பேச்சு**

முதலாம் இடம் - சி.ரூபகானன் (மீசாலை வீரசிங்கம் ம.வி.).

இரண்டாம் இடம் - க.கஸ்தூரியா (விடத்தற்பளை கமலாசனி வித்தி)

மூன்றாம் இடம் - ந.யசிந்தன் (கச்சாய்அ.த.க.பா.)

**பிரிவு-II**

**பேச்சு**

முதலாம் இடம் - நி.சோபிதா (சாவகச்சேரி இந்துக்கல்லூரி).

இரண்டாம் இடம் - கு.பிரியங்கா (வரணி ம.வி).

மூன்றாம் இடம் - சி.லக்சியா (மீசாலை வீரசிங்கம் ம.வி.)

**பிரிவு-III**

**பேச்சு**

முதலாம் இடம் - சி.கோபிதன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி).

இரண்டாம் இடம் - சி.அகல்யா (மீசாலை வீரசிங்கம் ம.வி).

மூன்றாம் இடம் - நி.கஜன் (கைதடி விக்னேஸ்வரா ம.வி).

**பிரிவு-IV**

**பேச்சு**

முதலாம் இடம் - த.பிரதீபன் (சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி).

இரண்டாம் இடம் - அ.பிரசன்னா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி).

மூன்றாம் இடம் - மோ.சசிதா (மீசாலை வீரசிங்கம் ம.வி).

**பிரிவு-V**

**பேச்சு**

முதலாம் இடம் - தெ.செந்தூரன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி).

இரண்டாம் இடம் - க.சுதாஸ்கரன் (மீசாலை வீரசிங்கம் ம.வி).

மூன்றாம் இடம் - யோ.மேனகா (சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி).

**பிரிவு-I**

**பாவோதல்**

முதலாம் இடம் - ப.நர்த்தகி (சாவ.இந்து ஆரம்ப பாடசாலை).

இரண்டாம் இடம் - த.நிஷானி (வரணி ம.வி).

மூன்றாம் இடம் - யோ.கார்த்திகா (குடமியன் அ.த.க.பாடசாலை).

**பிரிவு-II**

**பாவோதல்**

முதலாம் இடம் - பா.நிலாஜினி (மீசாலை வீரசிங்கம் ம.வி).

இரண்டாம் இடம் - த.நிதர்சனா (உசன் இராமநாதன் ம.வி).

மூன்றாம் இடம் - க.குணாஜினி (வரணி ம.வி).

**பிரிவு-III**

**பாவோதல்**

முதலாம் இடம் - செ.வினுஜா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி).

இரண்டாம் இடம் - ஜெ.சிந்துஜா (மீசாலை வீரசிங்கம் ம.வி)

மூன்றாம் இடம் - சி.வேணுமதி (மட்டுவில் சந்திர மௌலீச.வி).

**பிரிவு-IV**

**பாவோதல்**

முதலாம் இடம் - பா.கஜலக்சன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி).

இரண்டாம் இடம் - இ.தனுசன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி).

மூன்றாம் இடம் - ந.ஜெயசக்தி (விடத்தற்பளை கமலாசினி வி).

**பிரிவு-V**

**பாவோதல்**

முதலாம் இடம் - வீ.ஜீவினி (கொடிகாமம் திருநாவுக்கரசு)

இரண்டாம் இடம் - ப.உதயசாந்தினி (உசன் இராமநாதன் ம.வி).

மூன்றாம் இடம் - ப.வைஷ்ணவி (சாவகச்சேரி இந்துக் கல்லூரி).

**திறந்த போட்டி**

**விவாதம்**

முதலாம் இடம் - ச.நஜீபா, மு.கோகிலறமணி, ப.லோகேஸ்வரன் (வரணி ம.வி)

இரண்டாம் இடம் - மு.சத்தியப்பிரியா, க.கௌதமி, தே.றஜீந்திரா (இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய. வி).

(29)

# குடிநீர் பற்றாக்குறையை நீக்க யாழ். செயலகத்தில் ஆராய்வு!

யாழ். மாவட்டத்தில் குடிநீர் தட்டுப்பாடு நிலவும் பிரதேசங்களுக்கு நீர்வழங்குவது குறித்து நேற்று யாழ். செயலகத்தில் ஜி.ரி.இசற் நிறுவனத்தின் ஏற்பாட்டில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

யாழ். மாவட்டத்தில் உள்ள தீவுப் பகுதிகள் மற்றும் கைதடி, நாவற்குழி, கோப்பாய், அச்சுவேலி முதலான பகுதிகளுக்கு நீர்விநியோகம் மேற்கொள்வது குறித்துப் பேசப்பட்டது.

பொதுமக்களின் குடிநீர்த் தட்டுப்பாட்டை இல்லாதொழிப்பதற்கான பல புதிய நடைமுறைகளைக் கையாள்வது தொடர்பாக அங்கு கலந்துரையாடப்பட்டதாக யாழ். செயலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தச் சந்திப்பில் யாழ். அரச அதிபருடன் ஜி.ரி.இசற் அதிகாரிகள் கலந்துகொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# கிராம அலுவலர்களுக்கு மனித உரிமைகள் பயிற்சி!

யாழ்.பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கிராமசேவையாளர்கள் மற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கான மனித உரிமைகள் தொடர்பான பயிற்சிப்பட்டறை ஒன்று நேற்று இடம்பெற்றது.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயம், யுனிசெப், மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகள் இணைந்தே இந்தப் பயிற்சிப்பட்டறையை நடத்தினர்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள சகல பிரதேச செயலர் பிரிவுகளிலும் இத்தகைய பயிற்சிப்பட்டறைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இதன் அடிப்படையிலேயே, நேற்று யாழ்.பிரதேச செயலர் பிரிவுகளுக்குட்பட்ட கிராமசேவையாளர் மற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு இந்தக் கருத்தரங்கு நடத்தப்பட்டது.

மனித உரிமைகள் பேணுவது தொடர்பாக இதில் வலியுறுத்தப்பட்டது.

## வாராந்த ஆன்மீக சொற்பொழிவு

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில் பெரியாழ்வார் ஆசிரமத்தில் வாரம்தோறும் இடம்பெற்றுவரும் 17 ஆவது ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடரில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை கலைபபீட மாணவன் சி.முகுந்தன் சொற்பொழிவாற்றவுள்ளார். (20)

## கிராம மக்களால் வீதி புனரமைப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை கற்கோவளம் பகுதியில் உள்ள ஐந்தாம் வட்டாரத்தின் பிரதான வீதி புதிதாக அமைக்கப்பட்டு வருகின்றது.

மணலாக உள்ள ஒரு கிலோமீற்றர் நீளமான இந்த வீதியினை அமைத்துத் தரும்படி பருத்தித்துறை பிரதேச சபையுடன் பலமுறை தொடர்பு கொண்டும், எந்தவித பயனும் கிடைக்காததையிட்டு அந்தப் பிரதேச மக்கள் தமது சொந்தச் செலவில் தற்போது வீதியினை அமைத்து வருகின்றனர். (20)

## காணாமற் போனோர் தகவல் சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் கைது செய்யப்பட்டு காணமற்போனவர்கள் பற்றிய தகவல்களை, யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஆதரவுடன், பணிகளை மேற்கொள்வதற்கு காணாமற்போனோர் பாதுகாப்புச்சங்கம் நடவடிக்கைகளை எடுத்துள்ளது, எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு தென்மராட்சியைச் சேர்ந்தவர்கள் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியிலும், வடமராட்சி, யாழ்ப்பாணம், வலிகாமம், தீவகம் ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்கள் இல.16 கச்சேரி கிழக்கு ஒழுங்கை என்ற முகவரியில் உள்ள சங்கத்தின் செயலாளர் வீட்டில் பதிவுகளை மேற்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# பட்டதாரிகள் சங்கத்திலும் இன்று பதிவு செய்யலாம்!

(யாழ்ப்பாணம்)

தமது விபரங்களைப் பதிவு செய்யாத வேலையற்ற பட்டதாரிகளை யாழ்.வைமன் வீதியில் உள்ள யாழ்.மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தில் இன்று காலை பதிவினை மேற்கொள்ள முடியுமென சங்கத்தின் செயலாளர் பிரபா தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள வேலையற்ற பட்டதாரிகளை பட்டம் பெற்ற ஆண்டு ரீதியில் ஒழுங்குபடுத்தும் பொருட்டு பதிவுகள் மேற்கொள்ளும் பணிகள் நேற்று பிரதேச செயலகங்களில் நடைபெற்றன.

அவ்வாறு பதிவு செய்யப்பட்ட வேளை - தமது பதிவுகளை மேற்கொள்ளத் தவறியோர் இன்று காலை 10 மணிக்கு முன்னதாக சங்கத்தின் காரியாலயத்துக்கு வருகை தந்து பதிவு செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

## யாழ்ப்பாணம் - மாநகராட்சிமன்றம்

### நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் மஹோற்சவ கால தற்காலிக கடைகளை குத்தகைக்கு வழங்குதவற்கான கேள்வி அறிவித்தல் - 2004

நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் மஹோற்சவ காலத்தில் தற்காலிக கச்சான் கடைகள், மணிகாப்புக் கடைகள், ஐஸ் கிறீம் கடைகள்/வாகன நிலையங்கள், இனிப்புக்கடைகள், இதர கடைகள், துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையம், விளம்பர முகவர் நிலையங்கள் ஆகியவற்றை அமைப்பதற்கான நிலங்களைக் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் எதிர்வரும் 13.08.2004 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப.12.30 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

இதற்கான கேள்விப்படிவங்களை மீளளிக்க முடியாத படிவக் கட்டணம் ரூபா.300/- உம், மீளளிக்கக்கூடிய கேள்விப் பிணைப்பணமாக ஐஸ்கிறீம் கடைகளுக்கு ரூபா.10000/- உம் ஏனைய கடைகளுக்கு ரூபா.1000/- உம் சபையில் செலுத்துவதன் பேரில் எதிர்வரும் 12.08.2004 ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப. 3.00 மணிவரையும் மாநகராட்சிமன்ற நானாவித இறைவரிக்கிளையில் பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்வியை அரக்கு முத்திரையிடப்பட்ட கடித உறையிலிட்டு இடதுபக்க மேல் மூலையில் வியாபாரத்தின் தன்மை குறிப்பிடப்பட்டு எதிர்வரும் 13.08.2004 ஆம் திகதி பி.ப.12.30 மணிக்கு முன் அலுவலகத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். அல்லது ஆணையாளர் மாநகராட்சிமன்றம், யாழ்ப்பாணம் என முகவரியிட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும்.

கிடைக்கப்பெற்ற கேள்விகள் யாவும் எதிர்வரும் 13.08.2004 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப.2.30 மணிக்கு கேள்விச் சபையால் திறந்து பரிசீலிக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரர் அல்லது அவரது பிரதிநிதி எவரேனும் பிரசன்னமாக இருக்கலாம்.

மேலதிக விபரங்களை மாநகராட்சிமன்ற நானாவித இறைவரிக்கிளையில் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்வதுடன், கடைகளுக்கான வரைபடத்தையும் நேரில் பார்வையிடலாம்.

*குறிப்பு* : மேற்படி சபையால் வழங்கப்படும் தற்காலிக கடைகளைத் தவிர எதிர்வரும் 13.08.2004 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பித்து சபையின் அனுமதி பெற்றிராத எந்தத் தற்காலிக வியாபாரமும் திருவிழாக்காலத்தில் நடாத்த அனுமதிக்கப்படமாட்டாது என்பதையும் அறியத்தருகின்றோம்.

மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்.

கலாநிதி.க.குணராசா,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

(சி/2915)












# கிழக்கில் தாக்குதல் நடத்த வேண்டிய நிர்ப்பந்த நிலையில் புலனாய்வுத்துறை

## இணையத்தளம் ஒன்று கூறுகிறது

கருணாவிவகாரத்தால், புலிகள் மத்தியில் பிரச்சினை உருவாக்கி, இயன்ற இலாபத்தைப் பெறும் நோக்கில் செயற்பட்ட இராணுவ புலனாய்வுத்துறை, நீண்டகாலமாகப் பேணி வந்த தமிழ் ஆயுததாரிகளை இழக்கும் நிலைக்கு இப்போது தள்ளப்பட்டுள்ளது என, இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கருணாவையும் கருணாசார்ந்த சிலரையும் தமது புலனாய்வுத் துறைக்காக இணைத்துக் கொள்வதற்காக மேற்படி நபர்களை கொழும்புக்குக் கொண்டுவந்து பராமரித்து வந்தபோதும், இராணுவப் புலனாய்வுத்துறை - எதிர்பாராத விதமாக நடைபெற்ற நிகழ்வுகளால் அந்தத் திட்டம் முற்றாகச் சிதைவடைந்துள்ளது.

குறிப்பாக - கருணா சார்பாக இயங்குவதற்கு ஆட்கள் இல்லாத காரணத்தினால் - கேசவன், கஸ்ரோ போன்றோருடன் இணைந்து புலனாய்வுத்துறை ஆட்திரட்டலில் ஈடுபட்டபோதே மேற்படி நபர்கள் கொட்டாவவில் வைத்துக் கொல்லப்பட்டனர்.

இரண்டு புலனாய்வுத் துறை பாதுகாவலர்களின் பாதுகாப்புடன்-கொழும்பில் தங்கியுள்ள கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்களிடம் சென்ற கேசவன், கஸ்ரோ ஆகியோர் கருணாவுடன் இணையுமாறும்-கவர்ச்சிகரமான சம்பளம், போனஸ், வயதான காலத்தின் பின் ஓய்வூதியம் வழங்கப்படும் என்றும் பிரசாரம் செய்து வந்தனர்.

குறிப்பாகச் சச்சு மாஸ்ரர் சுட்டுக் கொல்லப்பட்ட பின், ஸ்தம்பித நிலையை அறிந்த கருணா பற்றிய செயற்பாடுகளை தீவிரமாக்குவதற்குப் புலனாய்வுத்துறை இவ்வாறு செய்தது.

இருந்தும், இவர்கள் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து, அந்தத் திட்டமும் பிழைத்த நிலையில், கொழும்பில் இராணுவப் புலனாய்வுப் பிரிவின் சொத்தாகக் கருதப்பட்ட புளொட் மோகன் கொல்லப்பட்ட சம்பவமானது கிழக்கில் மீண்டும் நெருக்கடியைத் தோற்றுவிக்கப் புலனாய்வுத்துறையை நிர்பந்தித்துள்ளது.

இவ்வாறான ஊடுருவலை எதிர்பார்த்திருந்த விடுதலைப் புலிகளால், தாக்குதல் சம்பவம் ஒன்றுக்காகச் சென்ற புலனாய்வுத் துறையைச் சார்ந்தவர்களைப் பெரியபுல்லுமலையில் வைத்துக் கைது செய்துள்ளனர்.

கருணாவால் மேலதிகப் பயன்பாட்டைப் பெற விரும்பிய புலனாய்வுத் துறையின் கிழக்கு மாகாணக் கட்டமைப்பே இப்போது சீர்குலையும் நிலை ஏற்பட்டுள்ளது.

அத்தோடு, கருணாவோடு சென்றோரில், தற்போது பிள்ளையான், இன்பன், ஜீவேந்திரன் ஆகியோரே எஞ்சி இருப்பதாகவும், அவர்களும் கருணாவுடன் நேரடித் தொடர்பு ஏதும் அற்ற நிலையிலேயே இருப்பதாகக் கருதப்படுவதாகவும் தெரியவருகின்றது.

இதேவேளை - கருணாவுக்கு அரசு பாதுகாப்புக் கொடுக்கவில்லையென்றும், அது கருணாவைத் தனது பாதுகாப்பில் ஒரு சிறைக் கைதியாகவே வைத்துள்ளதென்றும், அவர்களின் கட்டளைகளைச் சிரமேற்கொண்டு, செயற்படும் ஒரு சேவகனின் நிலையிலேயே கருணா இருப்பதையுமே தற்போதைய நிலைமைகள் எடுத்துக் காட்டுவதாகவும்,

கருணாவினால் தங்களுக்குப் பயனில்லை என்ற கருத்தை இராணுவமே ஏற்கத் தலைப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இவ்வாறு தனது கிழக்குப் பகுதிப் புலனாய்வாளர்களை இழந்து வரும் அரசாங்கம், மறுபுறத்தே அவர்களைத் தென் பகுதியில் தங்கவைத்திருக்கும் விடயத்தைப் பொலிஸ் உயரதிகாரிகளுக்குக் கூடத் தெரியப்படுத்தாததே, இன்றைய நிலைக்குக் காரணம் என்று கூறி, புலனாய்வுத் துறையுடன் நேரடியாகவே முரண்படும் நிலைக்குப் பொலிஸார் சென்றுள்ளனர்.

இந்த நிலையில், கருணாவும், அவரது ஆதரவாளர்களும் தொடர்ந்தும் செயற்பாட்டில் இருக்கிறார்கள் என்ற தோற்றத்தைக் காட்டவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகியுள்ள அரசு - கிழக்கில் எந்த நேரமும் கபடத்தனமான தாக்குதலை மேற்கொள்ளலாம் எனவும் அந்த இணையத்தளம் மேலும் தகவல் வெளியிட்டுள்ளது.

## இலங்கை அரசியல் நடவடிக்கையில் உலக வங்கி தலையிடக் கூடாது!

### தேசப்பற்று தேசிய இயக்கம் கோரிக்கை

(கொழும்பு)

உலக வங்கியின் இலங்கைக்கான செயலகத்தை, கடன் வழங்கும் நிறுவனமாக மட்டுப்படுத்தப்பட வேண்டுமென்று தேசப்பற்று தேசிய இயக்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கை அரசியலில் தலையிடும் அளவுக்கு அதன் நடவடிக்கைகளை, விரிவுபடுத்தாது தடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று அந்த இயக்கம், உலக வங்கித் தலைவரைக் கேட்டுள்ளது.

குறிப்பாக - சமாதானம் தொடர்பான விடயங்களில் தலையீடுகள் இருக்கக் கூடாதென்றும், உலக வங்கியின் தலைவருக்கு தேசப்பறறுள்ள தேசிய அமைப்பு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு நேரடியாகவோ, மறைமுகமாகவோ நிதியுதவி மற்றும் நிவாரணம் வழங்கப்படக்கூடாது என்றும் தேசப்பற்றுத் தேசிய அமைப்பு தனது கடிதத்தில் மேலும் கோரியுள்ளது.

## சமாதானப் பேச்சுக்களின் இறுதித் தீர்வு பொதுமக்கள் முன் சமர்ப்பிக்கப்படுமாம்

### பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கூறுகிறார்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மேற்கொள்ளப்படும் சமாதானப் பேச்சுக்களின் மூலம் எட்டப்படும் இறுதித்தீர்வு பொதுமக்களிடம் முழுமையாகச் சமர்ப்பிக்கப்படும் எனப் பிரதிப் பாதுகாப்புத்துறை அமைச்சர் ரட்ண சிறி விக்ரமநாயக்க தெரிவித்தார்.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் பதவியை ஏற்றுக்கொண்ட பின்னர், கட்டுநாயக்கவில் அமைந்துள்ள விமானப்படைத் தளத்துக்கு மேற்கொண்ட முதலாவது விஜயத்தின் போதே ரட்ணசிறி விக்கிரமநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

சமாதான முயற்சிகளின் பெறுபேறுகளை பொதுமக்களிடமிருந்து மறைப்பதற்கான எண்ணம் எதுவும் தமக்கு இல்லை எனத் தெரிவித்துள்ள அமைச்சர், இரு தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்படும் தீர்வு பொதுமக்களிடம் முன்வைக்கப்படும் எனவும் மேலும் கூறியுள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து கருதது வெளியிடுகையில் -

இறுதித் தீர்வை அடிப்படையாகக் கொண்டே சமாதானப் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படும்.

இந்த விடயத்தில் இருதரப்பும் அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இடைக்கால நிர்வாக சபைக்கு எதிராக

## சகல சக்திகளையும் ஒன்று திரட்ட ஜாதிக ஹெல உறுமய திட்டம்!

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் முன்வைத்த இடைக்கால நிர்வாக சபை அடிப்படையில், பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு எதிராக - நாட்டிலுள்ள அனைத்து சக்திகளையும் ஒன்று திரட்டிப் போராட்டம் நடத்தவுள்ளதாக ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

பேருவளைப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற ஜாதிக ஹெல உறுமயவின் அமைப்பாளர்கள் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அத்துரலிய ரத்தின தேரர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்தின தேரர் கருத்து வெளியிடுகையில் -

இடைக்கால நிர்வாக சபை என்பது தனியான ஈழ அரசு ஒன்றை உருவாக்குவதற்கான அடித்தளத்தை உருவாக்கிக் கொள்வதற்காக முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கையே.

சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு இலங்கைக்கு அழுத்தத்தைக் கொடுக்க எந்தவொரு வெளிநாட்டிற்கும் உரிமையில்லை.

இடைக்கால நிர்வாக சபையை அடிப்படையாகக் கொண்டு சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு அரசாங்கத்தக்கு எந்தவொரு உரிமையும் இல்லை எனவும் ஜாதிக ஹெல உறுமயவின் ஊடகப் பேச்சாளரான அத்துரலிய ரத்தின தேரர் மேலும் தெரிவித்தார்.

## இலங்கைக்கு விஜயம் செய்வது ஆபத்தானதென பிரிட்டிஷ் அரசு தனது பிரஜைகளுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கைக்குச் செல்லும் பிரிட்டன் நாட்டு உல்லாசப் பிரயாணிகள்-அத்தியாவசிய தேவை தவிர்ந்த வேறு காரணங்களுக்காக அந்த நாட்டின் வடக்கு - கிழக்குப் பகுதிக்குச் செல்லவேண்டாமென, பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது.

இவ்வாறு செல்ல விரும்புபவர்கள் - திருகோணமலை நகரம், நிலாவெளி, அறுகம்குடாப் பகுதிகளுக்கு எந்தவித பிரச்சினையுமின்றி செல்லலாமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக - பிரிட்டன் வெளியுறவு அமைச்சு, உல்லாசப் பயணிகளுக்கு வழங்கிய ஆலோசனையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்கு அத்தியாவசிய தேவை தவிர்ந்த பிற தேவைகளுக்குச் செல்லும் அனைவருக்கும் நாம் ஆலோசனைகளை வழங்குகின்றோம்.

அதாவது, வடக்கு - கிழக்கின் பகுதிகளில் மிகப்பெரிய கண்ணிவெடி அச்சுறுத்தல் உள்ளது. குறிப்பாக ஏ-9 வீதியின் இரு பகுதிகளிலும் இந்த அச்சுறுத்தல் உள்ளது.

அத்துடன் - அந்தப் பகுதியில் உள்நாட்டு யுத்த அச்சுறுத்தல் உள்ளது. அநேகமான பயணிகள் சுதந்திரமான முறையில் தமது பயணத்தை மேற்கொள்ள முடியாதுள்ளது.

பயணத்தின் முன்னர் நாம் உல்லாசப் பயணிகளிடம் வேண்டுவது-மருத்துவ காப்புறுதியை செய்யுங்கள் என்பதாகுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மகிந்த ராஜபக்ஷவே பிரதமராக தொடர்வார்



பிரதமர் மகிந்த ராஜபக்ஷ இன்றிலிருந்தும் பிரதமராகப் பதவியைத் தொடர்வார் என அரசாங்க வட்டாரங்களை மேற்கோள்காட்டிக் கொழும்புச்செய்திகள் தெரிவித்தன.

பிரதமர் பதவியில் நான்கு மாத காலம் மட்டுமே இருக்கலாம் என்ற நிபந்தனையுடன் தான், மகிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதி சந்திரிகா இந்தப் பதவியில் நியமித்திருந்தார்.

பொதுத்தேர்தல் முடிந்து இரண்டு நாட்களின் பின்னர் ஏப்ரல் 4 ஆம் திகதி இவர் தமது பதவியை ஏற்றார். மகிந்த ராஜபக்ஷ பதவியேற்ற பின்னர் இடம்பெற்ற நிகழ்வுகள் எதிர்பாராத திசையில் சென்று கொண்டிருப்பதால், ஜனாதிபதி சந்திரிகாவின் நிபந்தனைப்படி நான்கு மாதங்கள் பூர்த்தியாகும் இன்றைக்குப் பின்னரும் பிரதமராகப் பதவி வகிப்பார் எனத் தெரியவருகிறது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சிக்கு வந்த நான்கு மாத காலத்துக்குள், அரசியலமைப்பில் மாற்றம் செய்து நிறைவேற்று அதிகாரமுடைய பிரதமர் பதவியை உருவாக்கத் திட்டமிடப்பட்டிருந்தது.

இதனாலேயே, மகிந்த ராஜபக்ஷவுக்கு நான்கு மாதகாலமே பிரதமராக பதவி வகிக்கமுடியும் என்று நிபந்தனை விதிக்கப்பட்டிருந்ததுடன், இவரை பிரதமரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் நிரந்தரமாக குடியேறவும் அனுமதி வழங்கப்படவில்லை.

ஒரு விருந்தினராக வந்து செல்லவே அனுமதி வழங்கப்பட்டிருந்ததாகவும் ஆளும், கூட்டணியால் அரசியலமைப்பு மாற்றம் கொண்டு வரமுடியாததால், தொடர்ந்தும் மகிந்த ராஜபக்ஷவே பிரதமராக நீடிப்பார் எனவும் தகவல்கள் தெரிவித்தன.

## புரிந்துணர்வு உடன்பாட்டுக் கட்டுப்பாடுகளால் புலனாய்வாளர்களின் படுகொலைகளை பொலிஸாரால் தடுக்க முடியவில்லையாம்!

### விசேட பாதுகாப்புக் கூட்டத்தில் குற்றச்சாட்டு

போர் நிறுத்த ஒப்பந்தத்தின் மூலம் தமது செயற்பாடுகளில் விதிக்கப்பட்ட கடுமையான வரையறைகளின் காரணமாகவே புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர்கள் மீதான கொலைகள் கொழும்பில் அதிகரித்து வருவதாக - பொலிஸ் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு அதிகாரிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

போர் நிறுத்த ஒப்பந்தத்தின் காரணமாகப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை உரிய முறையில் அமுல்படுத்தி, சந்தேக நபர்களைக் கைதுசெய்ய முடியாத நிலை தமக்கு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு அதிகாரிகள் -

சுதந்திரமான முறையில் பயங்கரவாதத் தடுப்புப் பணிகளில் ஈடுபடுவதற்குத் தமக்கு ஏற்பாடுகள் செய்து தரப்படவேண்டுமெனவும் பாதுகாப்பு அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் கீழ் அடங்கும், குற்றப்புலனாய்வுத் திணைக்களம், விசேட பொலிஸ் புலனாய்வுப் பிரிவு, விசேட அதிரடிப்படை ஆகியவற்றினால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்தக் கூட்டம் - புளொட் மோகன் கொலை செய்யப்பட்டதை அடுத்து அவசரமாகக் கூட்டப்பட்டதெனத் தெரியவருகிறது.

இந்தக் கூட்டத்தில் இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சாந்த கொட்டேகொட மற்றும் பொலிஸ் மா அதிபர் இந்திரா டி சில்வா ஆகியோரும் கலந்து கொண்டதாகவும், தெரிவிக்கப்படுகிறது.

# இனியும் தோல்விகள் தொடராது

# இந்திய கப்டன் கங்கூலி பேட்டி!



ஆசியக் கிண்ணப் போட்டியில் ஏற்பட்டது போன்ற தோல்வி இனி மேலும் தொடராது. இந்தக் காலப் பகுதியில் வெற்றிகளை நிச்சயம் குவிப்போம் என்று, இந்திய அணித் தலைவர் கங்கூலி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்தத் தோல்விக்கு இந்திய அணி வீரர்களிடம் உடற்தகுதியில்லை என்பது காரணமல்ல. அது உண்மையும் அல்ல. வீரர்கள் அனைவரும் உடற்தகுதியுடன்தான் உள்ளனர்.

கடந்த காலத்தின்போதுகூட முதற் போட்டியில் இந்திய அணி நியூஸிலாந்திடம் தோற்றுவிட்டது. பின்பு நன்றாக விளையாடி அதே காலப்பகுதியில் பல போட்டிகளில் வெற்றிகளைப் பெற்றது. குறிப்பாகச் சொன்னால் பாகிஸ்தான் அணியை வென்றோம்.

அதேபோல் இந்தக் காலப் பகுதியில் முதல் போட்டியில் தோற்றுவிட்டாலும் - இன்னும் முத்தரப்புப் போட்டி, இங்கிலாந்து, அவுஸ்ரேலியா போட்டி என பல போட்டிகள் உள்ளன. அவைகளில் இந்தத் தோல்வி தொடராது. இனிவரும் போட்டிகளில் நிச்சயம் வெற்றிகள் பெறுவோம்.

வி.வி.எஸ்.லக்ஷ்மன், ஹர்பஜன் சிங் ஆகியோர் உடற்தகுதி இல்லாததால்தான் சரியாக விளையாடவில்லை எனக் கூறப்படுகிறது என்ற கேள்விக்கு -

அவர்களுக்கு உடற்தகுதி இல்லையென்று யார் சொன்னது? அவர்கள் நன்றாக உள்ளனர். திறமையாக விளையாடி வருகின்றனர். தொடர்ந்தும் நன்றாக ஆடுவார்கள் என்று கூறினார்.

## ஒருநாள் சர்வதேச

# கிரிக்கெட் தரவரிசையில் இலங்கை மூன்றாமிடத்தில்

ஒருநாள் போட்டியின் அடிப்படையில் நாடுகளின் வரிசைப் பட்டியலை சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி) வெளியிட்டது.

ஆசியக் கிண்ணத்தை வென்றதால், இலங்கை அணி 116 புள்ளிகளைப் பெற்று 3 ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளது. அவுஸ்ரேலியா 137 புள்ளிகளைப் பெற்று முதல் இடத்திலும், நியூஸிலாந்து 117 புள்ளிகளைப் பெற்று 2 ஆவது இடத்திலும் உள்ளன.

தென்னாபிரிக்கா (110 புள்ளிகள்) 4 ஆவது இடத்திலும், இந்தியா (106 புள்ளிகள்) 5 ஆவது இடத்திலும், பாகிஸ்தான் (104 புள்ளிகள்) 6 ஆவது இடத்திலும், மேற்கிந்தியத் தீவுகள் (101 புள்ளிகள்) 7 ஆவது இடத்திலும், இங்கிலாந்து (99 புள்ளிகள்) 8 ஆவது இடத்திலும், சிம்பாப்வே (61 புள்ளிகள்) 9 ஆவது இடத்திலும், கென்யா (28 புள்ளிகள்) 10 ஆவது இடத்திலும், பங்களாதேஷ் (0 புள்ளி) கடைசி இடத்திலும் உள்ளன.




இன்னும் 09 நாட்களில்




# ஆசிய கிண்ண வரலாற்றில் சாதனை 19 மில்லியன் டொலர் இலாபம்!

இலங்கையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்துமுடிந்த கிரிக்கெட் போட்டி மூலம் பத்தொன்பது மில்லியன் டொலர் இலாபமாகப் பெறப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

1984 ஆம் ஆண்டு ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் கிடைத்த ஆகக்கூடிய இலாபம் இதுவாகும்.

ஆசிய கிரிக்கெட் சபை நிறை வேற்று அதிகாரி அஷ்ரபுல் ஹக் இது குறித்துத் தகவல் வெளியிடுகையில்,

இந்தச் சுற்றுப் போட்டியில் பங்கேற்ற ஆறு நாடுகளுக்கும் 10.6 மில்லியன் டொலர் பகிர்ந்தளிக்கப்படவுள்ளது. எஞ்சிய பணம் ஆசிய கிரிக்கெட் வளர்சிக்குப் பயன்படுத்தப்படவுள்ளது.

இந்தப் போட்டியில் பங்கேற்ற நான்கு டெஸ்ட் அந்தஸ்து நாடுகளான இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, பங்களாதேஷ் ஆகியவற்றுக்கு தலா 2.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வழங்கப்படும்.

ஹொங்கொங் மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகியவற்றுக்கு தலா 30 ஆயிரம் டொலர் வழங்கப்படவுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



இன்று காலியில் ஆரம்பமாகவுள்ள இலங்கை அணியுடனான டெஸ்ட் போட்டியில் பங்கேற்கவுள்ள தென்னாபிரிக்க அணி வீரர்கள் பயிற்சியில் ஈடுபடுகின்றனர்.

# ஹொலண்ட் போட்டியில் கில்கிறிஸ்ட் இல்லை!



(ஹொலண்ட்)

ஹொலண்டில் நடைபெறவுள்ள முத்தரப்பு ஒரு நாள் போட்டித் தொடரில் அவுஸ்ரேலியாவின் அதிரடி ஆட்டக்காரரான கில்கிறிஸ்ட் விளையாடமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா, அவுஸ்ரேலியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் பங்கேற்கும் கிரிக்கெட் போட்டி எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை ஹொலண்டில் நடைபெறவுள்ளது. இந்தப் போட்டிக்கான 14 பேர் கொண்ட அவுஸ்ரேலிய அணி அறிவிக்கப்பட்டது.

அதிரடி ஆட்டக்காரரும், விக்கெட் காப்பாளருமான கில்கிறிஸ்ட் இந்தப் போட்டியில் ஆடவில்லை. அவரது மனைவி நிறைமாதக் கர்ப்பிணியாக இருக்கிறார். அவருக்கு இரண்டாவது குழந்தை பிறக்கவிருக்கிறது.

செப்ரெம்பர் மாதம் நடைபெறும் ஐ.சி.சி. சாம்பியன் போட்டியில் கில்கிறிஸ்ட் விளையாடுவார். காயம் குணமடைந்து விட்டதால், வேகப் பந்து வீச்சாளர் பிறட் லீ அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். ஹொலண்டில் நடைபெறும் 3 நாடுகள் போட்டிக்காக அவுஸ்ரேலிய அணி வருமாறு -

ரிக்கி பொண்டிங், ஹைடன், மார்ட்டின், லீமன், சைமண்ட்ஸ், ஹார்வி, பிரட் ஹொக், வாட்சன், பிறட் லீ, கிலெஸ்பி, கஸ்பரோ விச், மெக்ரா, பிரட் ஹாதின் (விக்கெட் காப்பாளர்), கிளார்க்.

# இந்திய அணி தோல்வியடைந்தற்காக கங்கூலியை மாற்றத் தேவையில்லை

## இந்திய கிரிக்கெட் சபைத் தலைவர் தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கையில் நடைபெற்ற ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டத்தில், இந்திய அணி தோல்வியடைந்தமைக்காக அணியின் கட்டனை மாற்றத் தேவையில்லை என, இந்திய கிரிக்கெட் சபைத் தலைவர் டால்மியா கூறினார்.

டால்மியா நிருபர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் -

ஆசியக் கிண்ணப் போட்டியில் இந்தியா தோற்றுவிட்டமைக்காக, அணித் தலைவர் கங்கூலியை மாற்றத் தேவையில்லை. ஒரு போட்டியில்தானே தோற்றுள்ளோம். இன்னும் பல போட்டிகள் உள்ளன. அவற்றில் வெற்றி பெறுவது குறித்துப் பார்ப்போம். இருப்பினும் வீரர்களை மாற்றுவது குறித்துத் தேர்வுக் குழுதான் முடிவுசெய்யும். நான் ஒன்றும் சொல்ல முடியாது.

காயம் காரணமாக சகீர்கானும் நெஹ்ராவும் நன்றாக விளையாடவில்லை என்று கூறுவது தவறு. இந்த இருவரும் நன்றாக விளையாடினர்.

பந்துவீச்சாளர்கள் நன்றாக, அபாரமாக விளையாடிய அளவுக்கு, துடுப்பாட்ட வீரர்கள் சரிவர விளையாடவில்லை. சரியாக விளையாடியிருந்தால் நாம் வெற்றி பெற்றிருப்போம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# தவறான வார்த்தைப் பிரயோகம் சங்ககார, தில்ஷானுக்கு அபராதம்

ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் இறுதிப் போட்டியின்போது, தவறான வார்த்தைப் பிரயோகங்களை இந்திய வீரர்களுக்கு எதிராகப் பயன்படுத்தினர் என்ற குற்றச்சாட்டின் பேரில், இலங்கை அணி வீரர்கள் மூவருக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

குமார் சங்ககார, இந்திய அணியின் வீரர்கள் மொகமட் கைவ் மற்றும் ஹர்பஜன் சிங் ஆகியோருக்கு எதிராகத் தகாத வார்த்தைகளைப் பிரயோகித்தார்.

இது தொடர்பாக ஆட்ட நடுவர்களாகப் பணியாற்றிய டேவிட் செப்பட் மற்றும் பில்லி பௌடன் ஆகியோர் போட்டி நடுவர் மைக் புரொக்டரிடம் முறையிட்டதை அடுத்து சர்வதேச கிரிக்கெட் சம்மேளனத்தின் விக்கெட் காப்பாளர் விதிகளின்படி - அவர், குமார் சங்ககார வி[illegible] மீதான குற்றம் கண்டு இறுதிப் போட்டியில் அவர் பெற்றுக்கொண்ட வருமானத்தைத் தண்டமாகச் செலுத்துமாறு உத்தரவிட்டார்.

அதேவேளை, குமார் சங்ககாரவுடன் இணைந்து தகாத வார்த்தைப் பிரயோகத்தில் ஈடுபட்டதாகக் கூறப்பட்ட தில்சான் மற்றும் உபுல் சந்தன ஆகியோருக்கு அவர்களின் போட்டி வருமானத்தில் அரைப் பங்கினைத் தண்டமாகச் செலுத்துமாறும் போட்டி நடுவர் உத்தரவிட்டார்.

## ரெனிஸ் தரவரிசையில் ஹெனின் முதலிடத்தில்!

ரெனிஸ் வீராங்கனைகளின் தரவரிசைப் பட்டியலை சர்வதேச ரெனிஸ் சங்கம் வெளியிட்டுள்ளது.

இதன்படி பெல்ஜிய வீராங்கனை ஜஸ்டின் ஹெனின் தொடர்ந்து முதலிடம் பிடித்துள்ளார். முதல் 10 இடங்களைப் பெற்ற வீராங்கனைகள் விபரம் வருமாறு -

ஜஸ்டின் ஹெனின் (பெல்ஜியம்), லிண்ட்சே டேவன் போர்ட் (அமெரிக்கா), அமெலி மவுரெஸ்மோ (பிரான்ஸ்), அனஸ்டாசியா மிஸ்கினா (ரஷ்யா), கிம் கிளிஸ்டர்ஸ் (பெல்ஜியம்),

எலீனா டெமன்டிவா (ரஷ்யா), ஜெனிபர் கேப்ரியாட்டி (அமெரிக்கா), மரியா ஷர போவா (ரஷ்யா), ஸ்வெட்லானா ரூஸ்னெட் சோவா (ரஷ்யா), செரீனா வில்லியம்ஸ் (அமெரிக்கா).



முன்னாள் அபார குத்துச் சண்டை சம்பியனான மைக்டைசன் கடந்த வாரம் இடம்பெற்ற போட்டியில் டானி வில்லியம்ஸின் தாக்குதலால் முழங்காலில் காயமடைந்தார். இதனால் இவருக்கு முழங்காலில் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளது.

## உதைபந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை யூனியன் கல்லூரி லண்டன்வாழ் பழைய மாணவர்களின் உதைபந்தாட்ட அணி, இன்று பிற்பகல் நான்கு மணிக்கு யூனியன் கல்லூரி அணிக்கு எதிராக சினேகபூர்வ ஆட்டம் ஒன்றில் கலந்து கொள்ளவுள்ளது.

யூனியன் கல்லூரி மைதானத்தில் இந்தப் போட்டி நடைபெறவுள்ளது.

## தாச்சிச் சுற்றுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட தாச்சிப் போட்டிச் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் மாபெரும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று -

பிற்பகல் 5 மணிக்கு யாழ். பல்கலைக் கழக விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இணுவில் இந்து விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

இந்தப் போட்டி சுதுமலை நாவலர் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

## டேவன் போர்ட் சம்பியன்

அமெரிக்காவில் உள்ள கலிபோர்னியாவில் நடைபெற்ற ஏ.டி.பி. ரெனிஸ் போட்டியின் பெண்கள் பிரிவில் ஒற்றையர் இறுதிப் போட்டியில் அமெரிக்க வீராங்கனை லிண்ட்சே டேவன்போர்ட், ரஷ்யாவைச் சேர்ந்த அனஸ் டாசியா மிஸ்கினாவுடன் மோதினார்.

இதில் டேவன்போர்ட் 6:1, 6:1 என்ற நேர் செட்டில் எளிதில் வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார்.

2. சரியான மின் இயந்திரத்தினைத் தெரிவு செய்க.



(1). (2) (3) (4)

3. கீழே காட்டப்பட்ட ஆக்க தொழிற்பாடு எதனைக் குறிக்கிறது?



(1) (2) (3) (4)

❖ இல. 4 முதல் 6 வரை காணப்படும் ஒவ்வொரு வினாவிலும் தந்துள்ள ஐந்து உருக்களுள் நான்கு உருக்கள் ஏதோ ஒருவகையில் ஒத்துள்ளன. எனினும், ஒரு உரு வித்தியாசமாக உள்ளது. அந்த வித்தியாசமான உருவைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுக.

4.



(1) (2) (3) (4) (5)

5.



(1) (2) (3) (4) (5)

6.



(1) (2) (3) (4) (5)

❖ 07 முதல் 09 வரை காணப்படும் ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்டுள்ள ஐந்து சொற்களில் நான்கு சொற்கள் ஏதோ ஒரு விதத்தில் தொடர்புபட்டுள்ளன. அத்தகைய சொற்களின் தொடர்பற்ற சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

7. ஆசிரியர், கைதி, வைத்தியர், சட்டத்தரணி, லிகிதர்.

8. வங்கி, வைத்தியசாலை, பாடசாலை, அரங்கம், தபால் நிலையம்

9. ஒட்டுதல், சாப்பிடுதல், மழை பெய்தல், பார்த்தல், நடனமாடல்

❖ இல 10 முதல் 14 வரை - அட்டவணை ரவி, மதி, குமார், பாலன் என்னும் நான்கு நண்பர்கள் தேசிய சேமிப்பு வங்கிக் கணக்கில் ஆறு மாதங்களுக்குள் வைப்புச் செய்த பணத் தொகையைக் காட்டுகிறது. அதன்படி வினாவப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளைத் தருக.

| பெயர் | மாதங்கள் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | ஜனவரி | பெப்ரவரி | மார்ச் | ஏப்ரல் | மே | ஜூன் |
| ரவி | 2.50 | 5.00 | 1.00 | 10.00 | 12.50 | 15.00 |
| மதி | 1.00 | 4.00 | 9.00 | ----- | 25.00 | 36.00 |
| குமார் | 5.00 | 10.00 | 15.00 | 20.00 | 25.00 | 30.00 |
| பாலன் | 1.00 | 2.00 | 4.00 | 7.00 | 11.00 | ----- |

ஒவ்வொரு பிள்ளையும் மாதாந்தம் பணம் வைப்புச் செய்த கோலத்தின்படி

10. மதி ஏப்ரல் மாதத்தில் வைப்புச் செய்த தொகை யாது?

11. பாலன் ஜூன் மாதத்தில் வைப்புச் செய்த தொகை யாது?

12. அந்த வருடத்தில் குமார் வைப்புச் செய்த மொத்தத் தொகையாது?

T.அம்பிகைபாகன் B.Ed Tamil Sp. Trd ஆசிரிய ஆலோசகர், மேல்மாகாணம்

## க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை -2004

### வரலாறும் சமூகக்கல்வியும்

(சென்றவாரத் தொடர்ச்சி...)

1 தொடக்கம் 5 வரையுள்ள வினாக்களுக்கு சரியாயின் (√) எனவும், பிழையாயின் (X) எனவும் குறிப்பிடுக.

1. இலங்கையின் கரையோரப் பிரதேச பரிபாலத்தினை மேற்கொண்ட முதலாவது பிரித்தானிய ஆளுநர் தோமஸ் மெயிற்லாண்ட் ஆவார் ( )
2. உயர் விஞ்ஞான கேந்திர கணித முறையைப் பயன்படுத்திக் கட்டப்பட்டதாக அகழ்வு மூலம் கண்டறியப்பட்ட தூபி ஜேதவனாராம ஆகும். ( )
3. இலங்கையில் மகாஜன பௌத்தமதச் செல்வாக்கினால் உருவாகிய படைப்பு சுவலோகேஸ்வரர் உருவம் ஆகும். ( )
4. இலங்கையில் இரண்டாம் தந்தை என துட்டகைமுனு மன்னன் சிறப்பிக்கப்பட்டான் ( )
5. புராதன காலப்பகுதியில் இலங்கை உரோமுடன் நெருக்கமான அரசியல் உறவினைக் கொண்டிருந்தது. ( )

❖

6. நிரல் (i) இல் நீர்ப்பாசன குளத்தின் உறுப்புக்களும் நிரல் (ii) இல் அவற்றின் செயற்பாடுகளும் தரப்பட்டுள்ளன. அவற்றைத் தொடர்புபடுத்தும்போது கிடைக்கும் சரியான விடை

| நிரல் i | நிரல் ii |
|---|---|
| i. கலிங்கல் | A - நீர்ச் சமநிலையைப் பேணுதல் |
| ii. சுருங்கை | B - நீர் அரிப்பிலிருந்து வெளியேற்றுதல் |
| iii. அலை தாங்கி | C - மேலதிகமான நீரை வெளியேற்றுதல் |
| iv. கலிங்கல் தொட்டி | D - நீர்ப்பாசனத்திற்கான நீரை வெளியேற்றுதல் |
| | E - குளத்திற்கு வேண்டிய நீரைக் கொண்டு வருதல் |

(1) EDAB (2) DCBA (3) ABCD (4) DCEB

7. உன்னதமான கலைத்திறனுக்கும், கட்டடக்கலை அமைப்பிற்கும் உதாரணமாக விளங்குவது
(1) சிகிரியா கண்ணாடிச்சுவர் (2) கலிங்கல் தொட்டி
(3) ருவான் வெலிசாயவின் யானைச்சுவர்
(4) அனுராதபுரம் குட்டப்பொடுன

8. நிரல் (i) இல் தாதுகோபங்களும் நிரல் (ii) இல் அவற்றைக் கட்டிய மன்னர்களும் தரப்பட்டுள்ளன. அவற்றைத் தொடர்புபடுத்தும்போது கிடைக்கும் சரியான விடையைத் தெரிவுசெய்க.

| நிரல் (i) | நிரல் (ii) |
|---|---|
| i. ருவான் வெலிசாய | A - மகாசேனன் |
| ii. தூபாராம | B - துட்டகைமுனு |
| iii. ஜேதவனராம | C - தேவநம்பிய தீசன் |
| | D - மகா பராக்கிரமபாகு |

(1) ABC (2) CBA (3) DCB (4) ADB

9. இலங்கையில் சர்வஜன வாக்குரிமை முதன் முதலில் வழங்கிய அரசியற் சீர்திருத்தம்
(1) 1833 கோல்புறூக்கமரன் சீர்திருத்தம்
(2) 1931 டொனமூர் யாப்பு
(3) 1921 1 ஆம் மனிங் சீர்திருத்தம்
(4) 1924 2 ஆம் மனிங் சீர்திருத்தம்

10. புராதன காலப்பகுதியில் சிறப்பு வைத்திய நிபுணன் என அழைக்கப்பட்ட மன்னன்
(1) புத்ததாசன் (2) மகாசேனன்
(3) பராக்கிரமபாகு (4) 1 ஆம் முகலன்



### பகுதி II

1. அருகில் உள்ள இலங்கைத் தேசப்படத்தில் ABC எனும் எழுத்துக்களால் மூன்று துறைமுகங்கள் காட்டப்பட்டுள்ளன. அவற்றின் புராதன பெயர்களைக் குறிப்பிடுக.
2. புராதன காலத்தில் இலங்கையில் வர்த்தகத் தொடர்புகளைக் கொண்டிருந்த நாடுகளைக் குறிப்பிடுக.
3. முற்காலத்தில் இலங்கை வர்த்தக மத்திய நிலையமாக விளங்கியமைக்கான காரணங்கள் எவை?
4. புராதன வெளிநாட்டு தொடர்பினால் எமது நாட்டின் கலாசாரத்தில் ஏற்பட்ட வளர்ச்சியினை 2 உதாரணங்கள் மூலம் விளக்குக.

I.S.ஜெகன் B.A. (Hons) Geo Spl

இங்கே மடிக்கவும்





## மாணவர் மலர்

## மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும், மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் 5 மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப்பரீட்சை - 2004

❖ கீழே தரப்பட்டுள்ள முதல் உள்ள கூடுகளின் எண்கள் குறித்த ஒரு கோலத்தில் தரப்பட்டுள்ளன. கடைசிக் கூட்டின் வெற்றிடத்தை நிரப்புக.

1.
2.
3..



❖ ஒவ்வொருன்றும் 25 cm² பரப்பளவுடைய 4 சதுரங்களைக் கொண்டு ஓர் சதுரம் அமைக்கமுடியும். அமைக்கப்பட்ட இச்சதுரத்தின் சுற்றளவு யாது?........................

5. 1 வாரம் 3 நாள் 10 மணித்தியாலயத்தை மணித்தியாலத்தில் தருக?. ........................

6. பி.ப. 6.28 என்பதை நியமநேரத்தில் தருக? ........................

7.



(i) இதிலுள்ள நிரைகளின் எண்ணிக்கை யாது?
(ii) நிரல்களின் எண்ணிக்கை யாது?...............

8.  என்பது குறிக்கும் எண் யாது?

❖

9. ஆக்கத் தொழிற் பாடத்தில் நீங்கள் கற்றுக் கொண்டதற்கு அமைய கீழே உள்ள வினாக்களுக்கு விடை தருக.

i அடிபபடை நிறஙகள யாவை?........................

ii நீலம், மஞ்சள், சிவப்பு ஆகிய நிறங்களைக் கலந்தவுடன் பெறப்படும் நிறம யாது?........................

iii பம்பரம் தயாரிக்கத் தேவையான பொருட்கள் மூன்று தருக?

iv.  அருகே காட்டப்பட்டுள்ளது பண்டைக்கால சிங்கள அலங்காரங்களுள் ஒன்றாகும். அதன் பெயர் யாது? ........................

v.  அருகில் காட்டப்பட்டது இரேகைவகைகளில் ஒன்று. இந்த இரேகையின் பெயர் யாது? ........................

❖

10. கீழே ஐந்து மாகாணங்களும் அவற்றின் தலைநகரங்களும் தரப்பட்டுள்ளன. அந்த ஐந்து மாகாணங்களுக்கும் பொருத்தமான தலைநகரங்களைக் குறிக்கும் எண்ணை வெற்றுக்கூட்டில் எழுதுக.

| மாகாணம் | | தலைநகரம் |
|---|---|---|
| i. வடமேல்மாகாணம் | ☐ | 1.அநுராதபுரம் |
| ii. வடமத்தியமாகாணம் | ☐ | 2.இரத்திபுரி |
| iii மத்தியமாகாணம் | ☐ | 3.பதுளை |
| iv. ஊவாமாகாணம் | ☐ | 4.புத்தளம் |
| v. சப்பிரகமுவமாகாணம் | ☐ | 5.கண்டி |

❖ 11. விடைகளின் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.

i நிகழ்வு: காயத்திரி ஒருவருக்கும் கொடுக்காது கொண்டு சென்ற மலர்ச்செடிகளை நடுவதற்கு முயற்சிக்கவில்லை.
(1) போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து
(2) வைக்கோற் பட்டடை நாய்
(3) அகத்தின் அழகு முகத்தில் தெரியும். (..................)

ii நிகழ்வு: பிருந்தா வறுமையிலும் செம்மையாக வாழ்க்கை நடத்தினாள். அவள் செயல் எதற்கு ஒப்பானது?
(1) அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு
(2) இரக்கப்போனாலும் சிறக்கப்போ
(3) பாத்திரமறிந்து பிச்சைகொடு (..................)

iii நிகழ்வு: அளவுக்கு மிஞ்சிய ஆசையால் களவெடுத்த சுந்தர் துன்பத்தை அனுபவித்தான்.
(1) சிறுதுளி பெருவெள்ளம் (2) வறுமையிலும் செம்மையாக வாழ்
(3) பேராசை பெருநட்டம் (..................)

iv நிகழ்வு: ஒருவரை சிறுவயதிலேயே திருத்திவிடவேண்டும். அவனை வயது சென்றபின் திருத்துவது கடினமான காரியமாகும்.
(1) அழுத பிள்ளை பால் குடிக்கும்
(2) ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?
(3) படைக்குப்பிந்து பந்திக்கு முந்து (..................)

v நிகழ்வு: பொருட்கள் தட்டுப்பாடாக இருக்கும் போது வியாபாரிகள் பொருள்களின் விலையைக் கூட்டுகின்றனர். வியாபாரிகளின் இச்செயல் எதற்கு ஒப்பானதாகும்.
(1) காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ளல்
(2) எரிகிற வீட்டில் பிடுங்கியது இலாபம்
(3) பேராசை பெருநட்டம் (..................)

❖

12. பொருத்தமான சொற்களை வைத்து வெற்றிடங்களை நிரப்புக.
i. தாவரத்தின் இனப்பெருக்கத்திற்குரிய பிரதான உறுப்பு ......... ஆகும்.
ii. இரையை மீட்டு உண்ணும் மிருகங்களுள் ........................ ஒன்று.
iii. கடற்கரை மண்ணரிப்பைத் தடுக்க ........................ போடவேண்டும்.
iv. பகையரசர்களுக்கு செலுத்தப்படும் பொருள் ........................ என அழைக்கப்படும்.
v. ஒருவரின் ஞாபகத்துக்காக அமைக்கப்படுவது .................... ஆகும்.

❖ கீழ்வரும் கூற்றுக்களில் சரியாயின் "√" எனவும் பிழையாயின "X" எனவும் எழுதுக.
i. நட்சத்திரங்களுக்கு சுயஒளி இல்லை. (.........)
ii. விஸ்வம்தையல் பொருத்துக்கள் தைக்கப் பயன்படும். (..........)
iii. நத்தை முட்டையின் நிறம் வெள்ளை ஆகும். (..........)
iv. திமிங்கிலம் ஒரு கடல்வாழ் உயிரினப் பாலூட்டி ஆகும். (..........)
v. பிறந்த நாள்வாழ்த்து மடல்களை ஸ்ரென்சில் அச்சுமுறையில் தயாரிக்க முடியாது. (..........)

❖ பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான விடையை எழுதுக
i. இலங்கைத் தேயிலையை அறிமுகப்படுத்திய நாட்டவர் யார்?
ii. இலங்கையின் தேயிலை ஆராய்ச்சி நிலையம் எங்கே அமைந்துள்ளது?
iii. தேயிலை வளரும் பிரதேசங்களில் தமிழர் தமது சமய வழிபாட்டிற்காகக்கூடும் கோவில்களில் பயன்படுத்தும் இசைக்கருவிகள் இரண்டை தருக?
iv. இலங்கையில் தேயிலை வளரும் பிரதேசங்களில் அமைந்த இரு நகரங்களை எழுதுக?
v. உலகில் தேயிலையைப் பயிரிடும் வேறு இரண்டு நாடுகளின் பெயா களைத் தருக?

❖ முதலாவது கொடுக்கப்பட்டுள்ள இரண்டு சொற்களைப் போல பொருந்தக்கூடிய இரண்டு சொற்களை கொடுக்கப்பட்டுள்ள சொற்களில் இருந்து தெரிந்து அதன் கீழ் கோடிடுக.
i குற்றத்துக்கு தண்டனை போல .........
(1) விளையாட்டு (2) வெற்றி (3) பரிசு (4) பந்து
ii இருளுக்கு ஒளி போல
(1) பசி (2) தாகம் (3) பழம் (4) நீர்
iii வயலுக்கு நெல் போல
(1) கடல் (2) சேனை (3) குரக்கன் (4) கப்பல்
iv கோழிக்கு முட்டை போல
(1) கன்று (2) பால் (3) உணவு (4) பசு
v வெப்பத்திற்கு கோடை போல
(1) மாரி (2) காற்று (3) குளிர் (4) புயல்

❖ "புயலுக்குப் பின் நான் கண்ட காட்சி" என்ற தலைப்பில் ஆறு கருத்துடைய வசனங்கள் எழுதுக. (ஒவ்வொரு வசனமும் நான்கு சொற்களுக்கு குறையாது இருத்தல் வேண்டும்)

❖ கீழே கணப்படும் பந்தியை வாசித்த இல 01 முதல் 17 வரை வினாக்களுக்குரிய விடைகளைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

மயூரன் மெல்ல மெல்ல கடற்கரையை நோக்கி நடந்தான். மேற்கு வானில் சஞ்சரிக்கும் முகிற் கூட்டங்கள், சிறகை விரித்துப் பறந்து செல்லும் பறவைக் கூட்டங்களைப் போல் அவனுக்குத் தோன்றின. கடற்கரையின் மணற்றரையில் நிறுத்தப்பட்டிருந்த வள்ளங்கள் ஓய் வெடுக்கும் வயோதிபர்களைப்போல் காணப்பட்டன. மயூரன் ஒரு வள்ளத்தின் மீது இருந்துகொண்டு கடற்பரப்பைப் பார்த்துக் கொண்டிருந்தான். பாரிய அக்கினிக் கோளம்போல் அமிழக் காத்திருக்கும் சூரியன் அடிவானில் பிரகாசித்தது. மயூரனுக்கு தான் கற்ற கவிதையொன்று நினைவிற்கு வந்தது. மீன் பிடித்துக் கொண்டு திரும்பும் ஒரு சிறிய வள்ளம் கடற்கரையோரத்தை நெருங்கியது. பறவைகள் மெதுவாக வானில் பறந்தன.

1. மயூரன் கடற்கரைக்குச் சென்றது காலை வேளையிலா? மாலை வேளையிலா? ..........
2. இந்தப் பந்தியிலுள்ள அடுக்குத் தொடர் ஒன்றினை எழுதுக? ..........
3. நடந்தான் என்பதன் நிகழ்கால வடிவம் யாது? ..........
4. மணற்றரை என்பதைப் பிரித்து எழுதுக? ..........
5. மெதுவாக வானில் பறந்தவை எவை? ..........

❖ கீழே காணப்படும் சொற்களுக்குரிய எதிர்கருத்துச் சொற்களை எழுதுக.

6. மெல்ல .......... 7. மேற்கு ..........

❖ கீழே காணப்படும் சொற்களுக்குரிய ஒத்தகருத்துச் சொற்களை எழுதுக.

8. பறவைகள் .......... 9. சூரியன் ..........

❖ பின்வரும் சொற்களுக்குப் பொருத்தமான பன்மைச் சொற்களை எழுதுக.

10. வள்ளங்கள் .......... 11. முகிற் கூட்டங்கள் ..........

❖ பின்வரும் சொற்களுக்குப் பொருத்தமான பன்மைச் சொற்களை எழுதுக.

12. கோளம் .......... 13. கவிதை ..........

❖ பின்வரும் ஒவ்வொரு சொற்களுக்குப் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை (ஆங்கில எழுத்தில்) எழுதுக.

14. வானம் .......... 15. பறவை ..........
16. கவிதை .......... 17. சூரியன் ..........

❖ படங்களினால் காட்டப்படும் ஒவ்வொரு விளையாட்டினதும் பெயரைத் தந்துள்ள புள்ளிக் கோட்டில் எழுதுக.



(18) .......... (19) .......... (20) ..........

❖ கீழே உள்ள சிட்டையில் காணப்படுவது, பிரணவன் தனது விளையாட்டிற்கு அண்மையிலுள்ள கடையில் வாங்கிய பொருட்கள் பற்றிய விபரங்களாகும். அதன்படி, இல 21 முதல் 28 வரை வினாக்களுக்குரிய விடைகளைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

21. குமார் தான் வாங்கிய பொருட்களுக்காகச் செலுத்த வேண்டிய மொத்தப் பணத்தொகை எவ்வளவு? ..........
22. குமார் வியாபாரிக்குக் கொடுத்தது ரூபா 500 காசுத் தாள் ஒன்று எனின், அவருக்குக் கிடைத்த மிகுதிப் பணம் எவ்வளவு? ..........

| வாங்கிய பொருட்கள் | வாங்கிய அளவு | விலை | |
|---|---|---|---|
| | | ரூபா | சதம் |
| அரிசி | 1 Kg | 130 | 00 |
| பல் | 1 1/2 l | 30 | 00 |
| புடைவை | 200 cm | 64 | 00 |
| பருப்பு | 500 g | 25 | 00 |
| தேங்காய் | 3 | 45 | 00 |
| | மொத்தம் | | |

மேலேயுள்ள சிட்டையின்படி
23. 1000 கிராம பருபபின விலை யாது? ..........
24. 750 மலலி லறறா பாலின விலை யாது? ..........
25. 3 மீற்றர் புடவையின் விலை யாது? ..........
26. 5 தேங்காய்களின் விலை யாது? ..........
27. குமார் வாங்கிய பாலில் இருந்த 100 மில்லி லீற்றர் பால் பைகறறுகளை பால எததனை தயாாிககலாம? ..........
28. 1/2 மீற்றர் புடவையிலிருந்து 6 கைக்குட்டைகள் தைக்க முடியு மெனில் குமார் வாங்கிய புடவையிலிருந்து எத்தனை கைக்குட்டைகள் தைகக முடியும? ..........

❖ இடது பக்கத்தில் ஐந்து இடங்களின் பெயர்கள் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு இடத்திலும் நடைபெறும் கருமங்களை வலது பக்கத்திலிருந்து தெரிந்து உரிய இலக்கத்தை எதிரேயுள்ள கூண்டினுள் இடுக. (உமக்கு இலகுபடுத்துவதற்காக ஓர் உதாரணம் தரப்பட்டுள்ளது)

| இடதுபக்கம் | | வலதுபக்கம் |
|---|---|---|
| உதாரணம்:- வைத்தியசாலை | 3 | 1) நெற்செய்கை இடம்பெறும். |
| 1. சுரங்கங்கள் | ☐ | 2) உப்பு உற்பத்தி நடைபெறும். |
| 2. சேவை | ☐ | 3) நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்கப்படும். |
| 3. வயல் | ☐ | 4) காடுகள் அழிக்கப்படும் பல்வேறு பயிர்செய்கைகள் மேற்கொள்ளப்படும். |
| 4. உப்பளம் | ☐ | 5) இரத்தினக் கல், காரீயம் என்பன பெற்றுக் கொள்ளப்படும். |

❖ கீழே ஒவ்வொரு வினாவிலும் உள்ள இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லைக் கூட்டினுள் தந்துள்ள சொற்களில் இருந்து தெரிந்து வெற்றிடத்தில் எழுதுக.

| கைவில்லை, துடுப்பு, அரம், தூக்குக் குண்டு, அலவாங்கு |
|---|

1. தச்சன் பாவிக்கும் கைவாளைத் தீட்டுவதற்கு .......... பயன்படுத்தப்படுகிறது.
2. நிலத்தில் தூண் ஒன்றை நடுவதற்கு குழி பறிக்க .......... பயன்படுத்தப்படுகிறது.
3. சிறிய எழுத்துக்களைப் பெரிதாக்கிப் பார்ப்பதற்கு .......... பயன்படுத்தப்படுகிறது.
4. சுவர் ஒன்று நேராகக் கட்டப்படுகிறதா? என்பதைப் பார்ப்பதற்கு .......... பயன்படுத்தப்படுகிறது.
5. தோணி ஒன்றில் பயணம் செய்ய .......... பயன்படுத்தப்படுகிறது.

❖ கீழ் வரும் பழமொழிகளைப் பூர்த்தி செய்க.

1. அடம்பன் கொடியும் ..........
2. .......... தூற்றிக்கொள்

இங்கே மடிக்கவும்



❖ பின்வரும் படத்தை அடிப்படையாக வைத்து வினாக்களுக்கு விடை தருக.



1. இத்திண்மத்தின் பெயரை எழுதுக ..........
4. விளிம்புகளின் எண்ணிக்கை ..........
5. உச்சிகளின் எண்ணிக்கை ..........
6. முகங்களின் எண்ணிக்கை ..........

❖ பின்வரும் வினாக்களுக்கு விடைகளை புள்ளிக் கோட்டில் எழுதுக.

1. 45 000 இற்கு முன்னுள்ள எண்ணையும், பின்னுள்ள எண்ணையும் எழுதுக
முன்னுள்ள எண் .......... பின்னுள்ள எண் ..........
2. XXI இந்த உரோமன் இலக்கத்திற்கு முன்னுள்ள எண்ணையும் உரோமன் இலக்கத்தில் எழுதுக.
முன்னுள்ள எண் .......... பின்னுள்ள எண் ..........
3. 5,10,20,☐,80 இந்த எண்கோலத்தில் வெற்றுக்கூண்டுக்குப் பொருத்தமான எண்ணை எழுதுக.
..........
4.  18.30 மணித்தியாலத்தை தந்துள்ள கடிகார முகத்தில் வரைந்துகாட்டுக ..........
5. 

இக்கார்ட்போட் அட்டையின் சுற்றளவு யாது? ......

❖ கீழ்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் உரிய விடையைத் தந்துள்ள நான்கு விடைகளில் இருந்து தெரிந்து அதன் கீழ் கோடிடுக.

1. அசைவற்ற நீர் நிலையினுள் ஒரு சிறிய கல்லை எறிந்தால் நீரில் தோன்றும் கோலம் யாது?



(1) (2) (3) (4)

❖ கீழ்வரும் வினாக்களுக்குரிய விடையின் கீழ் கோடிடுக.

1. இலங்கையின் அரச இலச்சினையில் காணமுடியாதது?
(1) சூரியன் (2) நட்சத்திரம் (3) சந்திரன் (4) நெற்கதிர்
2. இலங்கையில் காணப்படும் ஒரு நீர்வீழ்ச்சி அல்லாதது?
(1) துன்ஹிந்த (2) லக்ஷபான .(3) பம்பரகந்த (4) விக்டோரியா
3. தையல் வகையில் ஒன்று
(1) ஊசி (2) கத்தரிக்கோல் (3) நூல் (4) சோம்தையல்
4. வாகனங்களுக்கு எரிபொருளாகப் பயன்படுத்தப்படாதது
(1) தேங்காயெண்ணெய் (2) டீசல்
(3) மண்ணெண்ணெய் (4) பெற்றோல்
5. அசுத்த நீரின் மூலம் பரவும் ஒரு நோயாவது
(1) டெங்குக் காய்ச்சல் (2) எயிட்ஸ்
(3) வயிற்றோட்டம் (4)புற்றுநோய்

❖ பின்வரும் வாக்கியம் சரியாயின் (√) என்றும் பிழையாயின் (X) என்றும் எதிரேயுள்ள அடைப்புக்குறியினுள் அடையாளம் இடுக.

1. இலங்கையின் தேசியப் பூ நீலோற்பவம் ஆகும். ( )
2. வளர்ந்த ஒரு மனிதன், தினமும் ஒரு லீற்றர் நீர் பருகுவது போதுமானதாகும். ( )
3. தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் அழுக்கு நீர் (இரசாயனப் பொருட்கள் கலந்த நீர்) ஆற்று நீருடன் கலப்பதனால் ஆற்று நீர் அசுத்தமடைகிறது. ( )
4. ⌝⌝ என்பது சுருள் இரேகை எனப்படும். ( )
5. பாம்பு இனங்களுள் விரியன் பாம்பினால் மனிதனுக்குப் பெரும்பாலும் தீங்கு விளைவது இரவு நேரங்களிலாகும். ( )
6. மழை பெய்யும் சந்தர்ப்பத்தில் இடி இடிக்கையில், மைதானம் ஒன்றின் மத்தியில் அல்லது உயர்ந்த ஓர் இடத்தில் இருந்தால் இடியினால் பாதிக்கப்படாது பாதுகாக்கப்படலாம். ( )
7. மின்னேரியா, அபயவாவி, கலாவாவி எனும் பாரிய குளங்களை இலங்கையின் புராதன மன்னர்களே அமைத்தனர். ( )

❖ பின்வரும் கவிதையை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுக.

மிகச் சிறிய விதையினால்
மிகப் பெரிய மரம் வரும்
மிகச் சிறிய சிறுவனே
மிகப் பெரிய மனிதனாம்!
ஆலம் விதை சிறியது
ஆலமரம் பெரியது
ஆல மர நிழலிலே
ஆயிரம் பேர் தங்கலாம்!
பறவை கூடு கட்டலாம்
பழமும் வௌவால் தின்னலாம்
சிறகடிக்கும் பறவைகள்
சேர்ந்து கூடி வாழலாம்

கவிஞர் செல்ல கணபதி

1. மிகச் சிறிய விதையினால் வருவது எது? ..........
2. எதன் விதை சிறியது? ..........
3. நிழலில் எத்தனை பேர் தங்கலாம்? ..........

❖ பின்வரும் ஆங்கில எழுத்துச் சொற்களை தமிழில் எழுதுக.

1. Principal ..........
2. Playground ..........
3. Police Station ..........

❖ பின்வரும் தமிழ் சொற்களை ஆங்கில எழுத்தில் எழுதுக.

1. கைகள .......... 2. வாழைப்பழம் ..........

❖ 'நான் கடையொன்றுக்குச் சென்று பொருட்களை வாங்கும்போது' என்ற தலைப்பின் கீழ் பிழையில்லாது ஆறு வாக்கியங்கள் எழுதுக. ஒரு வாக்கியத்தில் குறைந்தது நான்கு சொற்களாவது இருப்பதுடன் வாக்கியத்தின் எழுவாய், பயனிலைகள் திருத்தமாக அமைந்திருத்தல் வேண்டும்.

1. ..........
2. ..........
3. ..........
4. ..........
5. ..........
6. ..........

❖ இல. 01 முதல் 03 வரையான வினாவில் முதல் உருவில் காட்டியிருப்பதற்குப் பதிலாகப் பயன்படுத்தக்கூடிய உருவைத் தந்துள்ள நான்கு விடைகளில் இருந்து தெரிந்து அதன் கீழ் கோடிடுக.

1. கிடையாகப் பார்க்கும் போது சரியான உரு யாது?



(1) (2) (3) (4)

## ஆட்சிக்கு வந்துள்ள அரசு யுத்தத்தின் மூலமாகத் தீர்வைபெட்டும் மறைமுக அணுகுமுறைகளை நாடுகிறது

### எழுச்சிப் பேரவைக் கூட்டத்தில் இளம்பரிதி



(நெல்லியடி)

புதிய அரசாங்கம் நடந்து கொள்ளும்விதம் எவ்விதத்தி லும் சமாதான முயற்சிக்குத் திருப்தியளிப்பதாக இல்லை.

யுத்தத்தின் மூலம் தீர்வை நாடி நிற்கின்ற மறைமுகமான அணுகுமுறைகள் சமாதானத் திற்கான நேசக்கரமா? என்று சந்தேகத்தைக் கிளப்பியுள்ள தாக யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமையன்று வடமராட்சியில் நடை பெற்ற யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் -

சமபலம் சமாதானத்துக்கான அடித்தளம் என்று கூறிக்கொண்டு இராணுவப் பலத்தை விரிவுபடுத்தி, புலிகளின பலத்தை, தமிழ் பேசும் மக்களின் பலத்தைக் குறைப்பதற்கான குறுக்குவழியைக் கையாள்வது எந்தவிதத்திலும் சமாதானத்தைத் தோற்றுவிக்கப்போவ தில்லை.

இராணுவப் புலனாய்வாளர்களுக்கு ஊடாக கருணா என்ற ஒரு தனி மனிதனைப் பகடைக்காயாக்கி பிரதேச வாதம் என்ற மாயைக்குள் மக்களைச் சிக்கவைத்து-தமிழ்த் தேசியத்தையும், தமிழ் மக்களின் பலத்தை குறைக்கவும் அவர்கள் எடுக்கும் சதிமுயற்சி நிச்சயம் பயனளிக்கப்போவதில்லை. மாறாக அம்முயற்சி, அப் பிரதேச மக்களாலேயே முறியடிக்கப்பட்டுவருவது கண் கூடு.

தமிழினத்தை, தமிழ் தேசியத்தை, தமிழரின் பலத்தை எந்த சக்தியாலும் அழிக்கமுடியாது என்ற உண் மையை அழுத்திக்கூறிவரும் எமது தலைவரின் வார்த் தையின் உறுதியை இன்று உலகம் உணரத்தொடங்கி விட்டது.

இந்த யதார்த்தமான உண்மையின் அடிப்படையி லேயே புரிந்துணர்வு, போர்நிறுத்தம் என்று நாம் அமைதி வழியை நோக்கி நேசக்கரம் நீட்டுகிறோம். அவற்றைப் பலவீனமானதாகக் கருதி யுத்த இருளுக் குள் எம்மை இழுக்கின்ற மறைமுக யுக்திகளை நாம் புரியாதவர்கள் அல்ல. அரசியல் ரீதியாக அமைதித் தீர்வுக்கு நாம் என்றுமே தயாராகவுள்ளோம்.

அந்த அடிப்படையிலேயே நாம் அழிந்து சிதைந்து போன எமது மக்களையும் அவர்களின் பொருளாதார வளத்தையும் கட்டியெழுப்பவேண்டிய அவசியத்துக் காகவே இடைக்காலத் தன்னாட்சி அதிகாரத்தைக் கோரி நிற்கிறோம்.

முற்றுமுழுதான இனத்தின் பலத்தையும், தனித் துவமான தலைமைத்துவத்தையும் கொண்டுள்ள எம்மை ஆக்கிரமிக்க நினைப்பார்களேயானால், அவ லத்தையும், அழிவையும் மட்டுமே சந்திக்கவேண்டியி ருக்கும்.

எனவே, தேசிய எழுச்சிப் பேரவை , மக்களின் அன றாட வாழ்க்கை முறையை முன்னெடுத்துச் செல்கின்ற ஒரு அரசியல் தேசிய அமைப்பாக உருவாக்கப்பட் டுள்ளது. இதற்கூடாகவே மக்கள் அரசியலில் வலுவான வர்களாகவும், தேசியத்தில் தெளிவு உள்ளவர்களாக வும் வளர்ச்சிபெற்று எமது பயணத்துக்கு வழி காட்ட முடியும்.

எமது தலைவர் சமாதானத்தை விரும்புகின்றார் என்றால் இந்த நாட்டையும் இந்த நாட்டு மக்களையும் இனமத மொழி வேறுபாடின்றி நேசிக்கிறார். சிங்கள பேரினவாதிகள் ஒருபோதும் தமிழர்களையோ, முஸ் லிம்களையோ நாட்டையோ நேசிப்பார்கள் என்று கூறமுடியாது. இந்த உண்மையை எல்லோரும் உணர வேண்டும் என்று கூறினார். (13)

## டெனிஸ் கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் ஓமந்தையில் தடுப்பு!

வவுனியாவில் கண்ணிவெடி யகற்றும் பயிற்சியை முடித்த பின் னர் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் வருவதற்காக வந்த டெனிஸ் கண்ணி வெடியகற்றும் பிரிவைச் சேர்ந்த 21 பேரை தொடர்ந்து பயணம் செய்யவிடாது, ஓமந்தை சோதனைச் சாவடியில் படையின ரால் தடுத்து நிறுத்தப்பட்டதாக தெரியவருகிறது.

இவர்கள் டெனிஸ் கண்ணி வெடி அகற்றும் பிரிவைச் சேர்ந்த வர்கள் என்பதற்குத் தகுந்த ஆதாரங்கள் இல்லையெனத் தெரி வித்தே, படையினரால் தடுக்கப் பட்டதாகவும், பின்னர் டெனிஸ் அமைப்பினர் படையினருடன் தொடர்புகொண்டு தகவல்களை வழங்கிய பின்னர் இவர்களைத் தொடர்ந்து செல்லப் படையினர் அனுமதித்ததாகவும், டெனிஸ் அமைப்பினர் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து வவுனி யாவிற்கு பயிற்சிக்காகச் சென்றவர் களே இந்த 21 பேரும் என்பது குறிப்பிடத்தக்கது. (20)

## யாழ்ப்பாண மாவட்டத்தில் — காணிப் பதிவு முறைக்குப் பதிலாக சொத்துரிமை பதிவு நடைமுறைக்கு!

### பொதுநிர்வாக அமைச்சர் உத்தரவு

யாழ்.மாவட்டத்தில் காணி களைப் பதிவுசெய்யும் முறைக்குப் பதிலாக - சொத்துரிமைகளைப் பதிவு செய்யும் முறையை உடனடியாக நடைமுறைப்படுத்துமாறு, அமைச் சர் அமரசிறி தொடங்கொட தமது அமைச்சு அதிகாரிகளைப் பணித் துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் காணியுரி மைகள் தொடர்பாக ஏற்பட்டுள்ள சிக்கல்களைத் தீர்க்கும் வகையி லேயே பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் இந்த நட வடிக்கையை எடுத்திருப்பதாகத் தெரியவருகிறது. கடந்தகால யுத்த சூழ்நிலை காரணமாக, யாழ். மாவட டத்தில் நிரந்தரமாக வசித்தவர் களில் 60 வீதமானோர் இடம் பெயர்ந்துள்ளதனால் குழப்பநிலை ஏற்பட்டுள்ளதாக அமைச்சர் அமரசிறி தொடங்கொட கூறினார்.

இவ்வாறான நிலையில் இடம் பெயந்தவர்களை மீளக் கூடியேற் றல், பதிவுசெய்தல் மற்றும் பிரச்சி னைகளைத் தீர்த்தல் ஆகியவற் றுக்கு உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறும் அமைச்சர் அதிகாரிக ளைப் பணித்துள்ளார்.

யாழ்ப்பாணம், மன்னார், வவு னியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, அனுராதபுரம், பொலநறுவை, புத்த ளம் ஆகிய மாவட்டங்களின் செய லாளர்கள் மற்றும் பிரதேச செய லாளர்கள் மத்தியில் உரையாற்றிய போதே அமைச்சர் இவ்வாறு தெரி வித்தார். கடந்தவாரம் அனுராதபுரத் தில் இவர்களுடனான சந்திப்பு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## ஆனைக்கோட்டைச் சந்தியில் மாலையில் கூடும் மீன்சந்தையால் போக்குவரத்துக்கு அசௌகரியம்!

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டைச் சந்திக்கு அண்மையில் பிரதான வீதியோரத் தில் மாலையில் கூடும் மீன்சந்தை யால் அந்த வீதியூடான போக்கு வரத்தில் சிரமங்கள் ஏற்படுகின்றன.

ஆனைககோட்டைச் சந்திப்பகுதி யில் முன்னர் இயங்கிவந்த மீன் சந்தை தற்போது சற்று நகர்ந்து வீதியோரமாக இயங்கிவருகிறது.

மாலைவேளையில் கூடும் இந்த மீன்சந்தைக்கு வருவோர் வீதியோ ரங்களிலே வாகனங்களை நிறுத்தி விட்டு மீன்கொள்வனவில் ஈடுபடு கின்றனர்

உரிய தரப்பினர் இதனைக் கருத் திற்கொண்டு அவர்களுக்கென ஒரு நிரந்தரமான இடத்தை ஒதுக்கிக் கொடுத்தால் மேற்குறிப்பிட்ட சிர மங்களைத் தவிர்த்துக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (44)



பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழக 10 ஆவது ஆண்டு விழாவில் கலைஞர் ஆர். ஜி. கிறீஸ்தோப்பர் கிரீடம் சூட்டிக் கௌர விக்கப்படுகிறார். (206)

## மக்கள் வங்கி காசாளரின் கொலைக்கு யாழ்.மாவட்ட கூட்டுறவுச்சபை கண்டனம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் மக்கள் வங்கியின் காசாளர் பஞசலிங்கத்தின் மரணச் சம்பவம் குறித்து யாழ்.மாவட்ட கூட் டுறவுச் ச~ப கண்டனம் தெரிவித் துள்ளது.

இது தொடர்பாக அவர்கள் விடுத் துள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது -

மக்கள் தமது அன்றாட இயல்பு வாழ்க்கையை அச்சமின்றி மேற் கொள்கின்ற இந்தக் காலகட்டத் தில் இத்தகையதொரு சம்பவம் நடைபெற்றிருப்பது வருந்தத்தக்க தும், கண்டிக்கத்தக்கதுமான ஒரு செயலாகும்.

பஞ்சலிங்கம் ஒரு வங்கி உத்தி யோகத்தர் என்ற ரீதியில் அவரிடமி ருந்து வங்கியின் சொத்துக்களை அபகரிக்கும் நோக்குடன் திட்ட மிட்டு சில விஷமிகளால் மேற்கொள் ளப்பட்ட காட்டுமிராண்டித்தனமான கோழைச் சம்பவமாகவே இது உள் ளது.

இத்தகைய சம்பவங்கள் இனி மேலும் எமது பிரதேசத்தில் இடம் பெறாதிருக்க துறைசார்ந்த அனைத் துத் தரப்பினரும் உரிய நடவடிக் கைகளை மேற்கொள்ளவேண்டு மெனவும், அவரின் குடும்பததின ருக்கு எமது ஆறுதலையும தெரி விக்கிறோம் என அந்த அறிக்கை யில் குறிப்பிடப்பட்டுள்ளது.


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

ஐந்தாவது அகவையில்



பெயர் : தி.லக்மராஜன்
முகவரி : நெடுந்தீவு - 13

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :----------------------------

முகவரி :----------------------------

பிறந்த ஆண்டு:----------------------------



கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

----------------------
பெற்றோர் ஒப்பம்


## தபால் விநியோக சேவையை விஸ்தரிக்குமாறு கோரிக்கை!

நெடுந்தீவு மேற்குப் பகுதிக்கான தபால விநியோக விஸ்தரிப்பை, மேற குத் தபாலகமூடாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவேண்டு மென அண்மையில் இடம்பெற்ற நெடுந்தீவு பிரதேச செயலக ஒருங் கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

தற்போது நெடுந்தீவு மேற்குத் தபாலகமூடாக முதலாம், மூன்றாம் வட்டாரங்களுக்கு மட்டுமே தபால் விநியோகம் இடம்பெறுவதுடன், 2 ஆம், 4 ஆம், 5 ஆம் வட்டாரங்க ளுக்கு நெடுந்தீவு பிரதம தபாலக மூடாகவே தபால் விநியோகம் இடம்பெற்றுவருகிறது.

இந்த நிலையை மாற்றி முதல் 5 வரையான வட்டாரங்களுக்கான தபால் விநியோகத்தை மேற்குத் தபாலகமூடாக மேற்கொள்ளவே நடவடிக்கை எடுக்குமாறு கோரப் பட்டமை குறிப்பிடத்தக்கது. (113)

## பற்றைகள் நிறைந்த பாதையால் போக்குவரத்துக்குப் பெரும் பாதிப்பு!

மட்டுவில் வடக்கு முத்துமாரி கோயில் வீதியையும், பொற்கொல் லர் வீதியையும் இணைக்கும் சுமார் 500 மீற்றர் நீளமான ஒழுங்கையின் இரு மருங்கிலும் பற்றைகள் மூடி வளர்ந்துள்ளதால் அந்தப் பாதை யூடாகப் போக்குவரத்து மேற்கொள் வதில் சிரமங்கள் ஏற்படுவதாக அந்தப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட காணிகளின் உரிமையாளர்களுக்கு கிராம அலுவலர்கள்மூலம் அறிவித் தல் கொடுத்தும் எதுவித நடவடிக் கையும் எடுக்கவில்லை.

மேற்குறிப்பிட்ட இரு வீதியை யும் இணைக்கும் மற்றொரு ஒழுங் கையான பனையடிப் பிள்ளையார் கோயில் ஒழுங்கையாலேயே தற் போது போக்குவரத்து மேற்கொள் ளப்படுகிறது. மாரி காலத்தில் இந்தப் பாதையூடாகத் தண்ணீர் பாய்ந்தோ டுவதால் இதனூடாகப் போக்கு வரத்து மேற்கொள்ளமுடியாது.

எனவே, குறிப்பிட்ட ஒழுங்கை யின் போக்குவரத்துத் தேவையை உணர்ந்து அதனைத் துப்பரவு செய்யு மாறு அந்தப்பகுதி மக்கள் காணி உரிமையாளர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (24)

### மாவட்ட மட்ட தமிழ்த்தினப் போட்டி

யாழ்.மாவட்ட மட்டத்திலான தமிழ்த் தினப்போட்டிகள் எதிர்வரும் 6 ஆம், 7 ஆம், 8 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளன.

இந்தப் போட்டிகள் வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்.மத்திய கல்லூரி, யாழ்.புனித கன்னியர்மடம் பாடசாலை ஆகியவற்றில் இடம் பெறவுள்ளதாக ஏற்பாட்டுக் குழுவி னர் அறிவித்துள்ளனர்.

வலய மட்டங்களில் முதலாம் இடங்களைப் பெற்ற பாடசாலைகள் மற்றும் போட்டியாளர்கள் இந்தப் போட்டிகளில் பங்குபற்றுகின்றனர்.






பட்டதாரிகள் நியமனத்தில் வன்னி மாவட்ட பட்டதாரிகள் புறக்கணிக்கப்பட்டதைக் கண்டித்து நேற்று கிளிநொச்சி அரச அதிபர் பணிமனையின் முன் கிளிநொச்சி மாவட்ட பட்டதாரிகள் சங்கம் மேற்கொண்ட மறியற் போராட்டத்தின் போது வாயிலை மூடி கண்டனப் பதாகை கட்டியிருப்பதையும், மறியற் போராட்டத்தில் கலந்துகொண்ட பட்டதாரிகளில் ஒரு பகுதியினரையும் காணலாம். (படங்கள்- திரு)

வன்னிப் பதிவுகள்

### கிளிநொச்சியில் விசர் நாய்க்கடிக்கு இலக்காவோர் அதிகரிப்பு

விசர் நாய்க்கடிக்கு இலக்காகி நாளொன்றுக்கு 10 இற்கு மேற்பட்டவர்கள் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கட்டாக்காலி நாய்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன. இதனை அழிப்பதற்கு சம்பந்தப்பட்டோர் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாததால், கட்டாக்காலிகளாகத் திரியும் நாய்கள் வீதியால் போக்குவரத்துச் செய்வோரைக் கடித்துவருகின்றன.

## முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் பிரதேச முன்பள்ளிகளிடையிலான விளையாட்டுவிழா

முல்லைத்தீவு மாவட்டம் - ஒட்டுசுட்டான் பிரதேச முன்பள்ளிகளுக்கிடையிலான பிரதேச மட்டத்திலான விளையாட்டுப் போட்டி கற்சிலைமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

ஒட்டுசுட்டான் - முல்லைத்தீவு அகதிகள் புனர்வாழ்வுக்கழக இணைப்பாளர் சஞ்சீவன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - பொதுச்சுடரினை கூழாமுறிப்பு கிராம அலுவலர் பாலசுப்பிரமணியம், ஒட்டுசுட்டான் மகா வித்தியாலய அதிபர் பங்கயற்செல்வன், முன்பள்ளி கல்விப் பணிப்பாளர் கிருபரஞ்சினி ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமழீழத் தேசியக்கொடியை கற்சிலைமடு கிராம அரசியற்பொறுப்பாளர் கதிர் ஏற்றி வைத்தார். ஒட்டுசுட்டான் மகா வித்தியாலய அதிபரின் ஆசியுரையுடன் விளையாட்டுக்கள் ஆரம்பமாகின.

போட்டியில் வெற்றிபெற்ற சிறுவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டன.

## பாதுகாப்பற்றநிலையில் காணப்படும் வட்டக்கச்சியூடான இணைப்பு பாலம்

கிளிநொச்சி நகரின் புறப்பகுதியிலுள்ள இரத்தினபுரம், திருவையாறு கிராமங்களில் வசிக்கும் மக்கள் வட்டக்கச்சிக்குச் செல்லும் பிரதான வீதியின் இணைப்புப் பாலம் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளதால் - அந்தப் பாலத்தினூடான போக்குவரத்து ஆபத்து மிகுந்ததாகவுள்ளது.

இரணைமடு வாய்க்காலின் மீதாகவுள்ள இந்தப் பாலம் பக்கக் கட்டின்றிக் காணப்படுகிறது. இரவில் இந்தப் பாதையூடாக போக்குவரத்தில் ஈடுபடுவோர் பலர் விபத்துக்குள்ளாகின்றனர்.

இதனை உரிய தரப்பினர் கவனத்தில் கொண்டு திருத்தம் செய்தால் போக்குவரத்து பாதுகாப்பானதாக அமையும் என்பதுடன், விபத்துக்களையும் தடுக்கலாம் என இந்தப் பாதையினூடாக போக்குவரத்தில் ஈடுபடுவோர் தெரிவித்தனர்.



### மல்லாவியில் அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் 90 குடும்பங்கள்

யாழ்.மாவட்டத்திலுள்ள உயர் பாதுகாப்பு வலயங்களில் மீளக் குடியமரமுடியாத 90 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள், அடிப்படை வசதிகள் எதுவுமற்ற நிலையில் மல்லாவியில் வசித்து வருகின்றன.

இவர்களுக்குத் தேவையான குடிநீர் வசதி, மலசலகூட வசதி என்பன போதியளவில் செய்து கொடுக்காமையால் இவர்கள் மிகுந்த சிரமத்துடன் வாழ்க்கையை நடத்துகின்றனர்.

## பொருண்மிய நிறுவனத்தால் விவசாயிகள், கால்நடை வளர்ப்போரின் பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை

(கிளிநொச்சி)

வன்னியில் விவசாயிகள் மற்றும் கால்நடை வளர்ப்போரின் பிரச்சினைகளைத் தீர்க்க தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் துரித நடவடிக்கை எடுத்துள்ளது.

விவசாயிகள் மற்றும் கால்நடை வளர்ப்போர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்கான முக்கிய கூட்டமொன்று அண்மையில் நடத்தப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் பொருண்மிய மேம்பாட்டுப் பொறுப்பாளர் கரிகாலன் கருத்துத் தெரிவிக்கையில்-

விவசாயிகள் பாதிக்கப்படாதவாறும், அவர்களது உற்பத்திகள் தடைப்படாத வகையிலும் - அவர்களது தேவைக்கேற்ப விற்பனை செய்வதற்குமாக ஒரு கிலோ இறைச்சியின் விலையை 85 ரூபாவாக அதிகரித்ததுடன், மாட்டின் எடை சர்வதேச அளவுத்திட்டத்துக்கு அமைவாக நிறுக்கப்படவேண்டும் எனவும் முடிவு செய்யப்பட்டது.

அத்துடன் கால்நடைகளின் நோய்களைக் கருத்திற்கொண்டு கால்நடைகளைக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வெளியே கொண்டு செல்லவோ, வெளிமாவட்டத்திலிருந்து வன்னிக்கு எடுத்துவருதோ தடைசெய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, வன்னியில் கால்நடைகளுக்கு கால்வாய் நோய் ஏற்பட்டதன் காரணமாக, அதன் இறைச்சி, பால் முதலானவற்றின் விற்பனைக்கு கடந்த பல வாரங்களாக தடைவிதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் விவசாயிகள் எதிர்நோக்கும் பல முக்கிய பிரச்சினைகளுக்கும் தீர்வுகாணப்பட்டது.

## கிளிநொச்சிக்கு இவ்வாண்டு இறுதிக்குள் குழாய் மூலமான குடி நீர் விநியோகம்!

கிளிநொச்சி நகருக்கு இந்த ஆண்டு இறுதிக்குள் குழாய் மூலமான குடிநீர் வழங்கப்படும் என தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் மாவட்ட பொறியியலாளர் தெரிவித்தார்.

1990 இல் சத்ஜய நடவடிக்கை மூலம் கிளிநொச்சி நகரம் இராணுவத்தால் கைப்பற்றப்பட்டபோது நீர் வழங்கல் கட்டமைப்பு முழுமையாக அழிக்கப்பட்டது.

இப்பொழுது நீர்ப் திட்டத்தின் கீழ் 135 மில்லியன் ரூபா செலவில் கிளிநொச்சி நகரத்துக்கான குடிநீர் வழங்கல் திட்டம் புனரமைப்புச் செய்யப்படுகின்றது.

கிளிநொச்சி குளமருகே நீர் ஏற்றுப்பகுதி நீர் வடிகட்டல் சுத்திகரிப்பு கட்டமைப்பு மீளமைப்புச் செய்யப்படுகின்றது. கிளிநொச்சி நகரிலும் பரந்தன் சந்தியிலும் இரு தாங்கிகள் கட்டப்படுகின்றன. கிளிநொச்சி தாங்கி 1000 கனமீற்றர் கொள்ளளவும், பரந்தன் தாங்கி 97 கனமீற்றர் கொள்ளவும் கொண்டது.

கிளிநொச்சிக்கு வடக்காக பரந்தன் குமரபுரம் வரைக்கும், தெற்காக இரணைமடு சந்தி வரைக்கும், மேற்காக கனகபுரம் வரைக்கும், கணேசபுரம் வரைக்கும் மொத்தம் 38.5 கிலோமீற்றர் தூரத்துக்கு இந்த நீர் வழங்கல் மேற்கொள்ளப்படவுள்ளதாக மாவட்டப் பொறியியலாளர் தெரிவித்தார்.

இந்த ஆண்டு டிசம்பருக்குள் நீர் வழங்கல் ஆரம்பிக்கப்பட்டுவிடும் எனத் தெரிவித்த அவர் - பூநகரி போன்ற குடிநீர் தட்டுப்பாடு உடைய பகுதிகள் ஏன் முன்னுரிமைப்படுத்தப்படவில்லை. ஏன் எனக் கேட்டபோது முன்னர் மேற்கொள்ளப்பட்டதன் புனரமைப்பே இது எனவும் புதிதாக திட்டம் எதுவும் நடைமுறைப் படுத்தப்படவில்லை எனவும் தெரிவித்தார்.

## காணிகளை வழங்க நடவடிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு தண்ணிமுறிப்புப் பகுதியிலுள்ள வயல் காணிகளில் முஸ்லிம்களுக்குச் சொந்தமான காணிகளை அவர்களிடம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சதாசிவம் கனகரட்ணம் தெரிவித்தார்.

அண்மையில் முல்லைத்தீவிலிருந்து இடம்பெயர்ந்து - புத்தளம் மாவட்டத்தில் வசிக்கும் மக்களைச் சந்தித்தபோது அவர்கள் தங்களுக்குச் சொந்தமான காணிகளை மீளவும் பெற்றுத்தருமாறு கோரியதாகவும் தெரிவித்தார்.

இதற்கமைய அவர்களில் 149 பேருக்கு தலா 3 ஏக்கர் வீதம் தண்ணிமுறிப்புப் பகுதியில் வயல் காணிகள் இருப்பதனால், அவற்றைப் படிப்படியாக அவர்களிடம் கையளிக்கும் வகையில் அரசியற்துறையினருடன் கலந்தாலோசித்து சரியான காணிப்பத்திரங்களை அவர்களுக்கு சமர்ப்பித்து உரியவர்கள் அதனைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## புலிகளின் குரலின் முத்தமிழ் கலையரங்கம் வடமராட்சி கிழக்கில் சிறப்பாக இடம்பெற்றது

புலிகளின் குரலின் மாதாந்த முத்தமிழ் கலையரங்கமும் புதிய கதைகள் நூல் அறிமுக விழாவும் நேற்றுமுன்தினம் வடமராட்சி கிழக்கில் சிறப்பாக நடைபெற்றன.

வானொலி மன்றத் தலைவர் வே.புவனேந்திரராசா தலைமையில் ஆரம்பமான இந்த நிகழ்வுகளில் பொதுச்சுடரினை லெப்ரினன்ட் கேணல் காவியா, மேஜர் மோகன் ஆகிய மாவீரர்களின் தாயார் ராஜபாக்கியம் ஏற்றினார்.

தொடர்ந்து, வரவேற்புரையை மாமுனை பாடசாலை அதிபர் ஸ்ரீ ராமச்சந்திரன் நிகழ்த்தினார். போராளி மலைமகளின் புதிய கதைகள் நூல் அறிமுக விழா ஆசிரியை பாமினி தலைமையில் ஆரம்பமாகியது.

நிகழ்வில் - நூல் மதிப்பீட்டுரையை மருதங்கேணி இந்துக்கல்லூரி அதிபர் நவநீதமணி நிகழ்த்தினார். நிகழ்வில் முதற்பிரதியை புலிகளின்குரல் நிறுவனப் பொறுப்பாளர் நா.தமிழன்பன் வழங்க, லெப்ரினன்ட் கேணல் காவியா, மேஜர் மோகன் ஆகிய மாவீரர்களின் தாயார் பெற்றுக்கொண்டார்.

தொடர்ந்து பிரதிகளை நூல் ஆசிரியர் மலைமகள், மருதங்கேணி கோட்டக்கல்வி அதிகாரி ரகுநாதன் ஆகியோர் வழங்கினர். நிகழ்வில் கருத்துரைகளை புலிகளின் குரல் படைப்பாளரும், அறிவிப்பாளருமான கவிஞர் பொன்காந்தன், புலிகளின் குரல் நிறுவனப் பொறுப்பாளர் நா. தமிழன்பன் ஆகியோர் நிகழ்த்தினர்.

நிகழ்வில் வடமராட்சி கிழக்கு கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலை மாணவர்கள் வழங்கிய நடனங்கள், சிறுவர் நாடகங்கள் என்பன நடைபெற்றதுடன், பேபி ஆசிரியையின் நெறியாள்கையில் உருவான 'சங்கநாதம்' எழுச்சி நிகழ்வு, நவம் நெறியாள்கையில் உருவான 'பயணத்தில்' நாடகம் என்பன இடம்பெறறன.

பெருமளவான மக்கள் கலந்துகொண்டிருந்த இந்த நிகழ்வில் பங்கெடுத்தோருக்கான புலிகளின் குரலின் பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டன.

## புதுக்குடியிருப்பில் இன்று மாபெரும் கலைவிழா

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு வலய கல்விச்சமூகத்தின் ஏற்பாட்டில் மாபெரும் கலைவிழாவொன்று இன்று புதுக்குடியிருப்பு சுப்பிரமணியம் வித்தியாலயத்தில் நடத்தப்படவுள்ளது.

இந்த விழாவின் ஆரம்ப நிகழ்வாக மாலை 3 மணிக்கு புதுக்குடியிருப்பு வைத்தியசாலை முன்றலிலிருந்து விருந்தினர்கள் அழைத்துவரப்படவுள்ளனர். இதில் பங்கேற்போர் தமிழர்களுக்குரிய பாரம்பரிய உடைகள் அணிந்து கலாசார விழுமியங்களைப் பேணும் வகையில் கலந்துகொள்வர்.

ஊர்வலத்தின்போது சிலம்பு கூறல், பண்டாரவன்னியனின் படையெடுப்பு, மனுநீதி கண்ட சோழன், ஆனையை அடக்கிய அரியாத்தை மற்றும் இலக்கிய வரலாற்றுச் சம்பவங்களைச் சித்தரிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட ஊர்திகளின் பவனியும் இடம்பெறும்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*குடிபுறங் காத்துஓம்பிக் குற்றம் கடிதல்*
*வடுவன்று வேந்தன் தொழில்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## அச்சுறுத்தலும், ஆரத்தழுவுதலும்.

அண்மையில் நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சரும், இலங்கையின் சமாதான முன்னெடுப்புக்களுக்கு அனுசரணையாளராகச் செயற்படுபவர்களில் முக்கியமானவருமான விதார் ஹெல்கிசன இங்கு அமைதிப்பேச்சுவார்த்தைகளில் எதிர்கால நகர்வுகள் குறித்து பேசுவதற்கென - இலங்கைக்கு வருகை தருவதற்கு முன்னர் அது தொடர்பான விடயங்களில் இலங்கை அரசைச் சேர்ந்தவர்களின் பொறுப்பற்றதும், சமாதானப் பேச்சுக்களுக்கு எதிரானதுமான நடவடிக்கைகளால் விசனமும், வெறுப்பும், கோபமும் கொண்டவராகி தனது உணர்வு நிலையை வெளிப்படுத்தும்போது, சமாதான முயற்சிகளுக்கு இடையூறு விளைவிப்பதன்மூலம் நெருப்போடு விளையாடவேண்டாம் என்று அச்சுறுத்தும் பாணியிலான அறிவிப்பொன்றை வெளியிட்டிருந்தமை நினைவிருக்கலாம்.

அந்த அறிவிப்பு வெறுமனே விதார் ஹெல்கிசனின் குரல் வழியாக வந்ததுபோன்று தோற்றம் காட்டினாலும், அதற்குப் பின்னணியில் வேறுசில வலுவான சக்திகளின் தூண்டுதல் பலமும் இருந்திருக்கவே செய்யும் என்பதில் ஐயமில்லை.

ஏற்கனவே, ஜப்பான் இதுதொடர்பாக மிகக்கடுமையான நிலைப்பாடு ஒன்றை எடுத்துள்ளமை தெரிந்தவிடயமே. வொஷிங்டனிலும், டோக்கியோவிலும் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் உச்சிமாநாட்டில் முடிவெடுக்கப்பட்டதன் பிரகாரம் - இலங்கைக்கு வழங்குவதாக உறுதியளித்த பெருமளவு நிதியை சமாதானத்தின் பெயரிலேயே வழங்கவேண்டும் என்ற விடயத்தில் ஜப்பான் எந்தவிதமான நெகிழ்வுத்தன்மையையும் காட்டத்தயாராகவில்லை.

இதனை ஜப்பானின் விசேட தூதுவர் யசூஷி அகாஷி பல சந்தர்ப்பங்களிலும் தெளிவுபடக்கூறியுள்ளமையானது இலங்கை அரசுக்கு எரிச்சலூட்டும் விடயமாகியுள்ளபோதிலும், அதற்கு எதிராக எதனையும் செய்யமுடியாத நிலையில் அது இன்னமும் திணறிக்கொண்டேயுள்ளது.

சமாதான முயற்சிகளை ஆத்மார்த்தமாக - ஆரம்பம் முதலே எதிர்த்துவந்தவரான ஜனாதிபதியும், அவர் தலைமையிலான அரசும் சர்வதேச நிதிவழங்கும் நாடுகளின் இந்த நிலைப்பாட்டை ஏற்கவும் - நிராகரிக்கவும் முடியாது திணறிக்கொண்டுவரும் சூழலில், சமாதானம் குறித்து வெறுமனே பேசிக்கொண்டே காலத்தைக் கடத்தி நிதிவளங்களையும் பெற்றுவிடலாம் என்ற அரசு போட்ட திட்டம் சாத்தியமற்றதொன்றாகிவிட்டது.

அடுத்த கட்டமாக, சமாதான முன்னெடுப்புத் தொடர்பாக விடுதலைப் புலிகள் எப்போதும் தெளிவானதும், உறுதியானதுமான தமது கருத்து நிலைப்பாட்டை சர்வதேச சமூகத்தின் முன் வைத்துள்ள நிலையில் அந்த அளவுக்கு உறுதியான ஒரு நிலைப்பாட்டினை எடுக்கும் திராணி அரசுக்கு இன்னமும் இல்லை என்பதையும், சர்வதேச சமூகம் இப்போது புரிந்துகொண்டுள்ளதை பல நாடுகளிலும் இலங்கை அரசின் மீதான நம்பிக்கை தளர்ந்துவருவதன் மூலம் புரிந்துகொள்ள முடிகிறது.

நோர்வேயின் அமைச்சர் விடுத்த எச்சரிக்கையின் தொனி ஆழமானது மட்டுமல்ல, அரசுக்கு அதிரடியாக விழுந்த ஒன்றுமாகும். அந்த எச்சரிக்கை தொடர்பாக அரசு தரப்பில் இருந்து எந்த விதமான பதிலும் வெளிவராமையானது, அரசு தன்பக்கக் குற்றத்தை மறுக்கமுடியாத நிலையில் உள்ளது என்பதையே உறுதிப்படுத்தியுள்ளது.

நோர்வே பிரதி வெளியுறவு அமைச்சரின் 'நெருப்புடன் விளையாடாதீர்' என்ற எச்சரிக்கையின் சூடு ஆறமுன்னர் இப்போது, தெற்காசிய விவகாரங்களுக்கான அமெரிக்க பிரதி இராஜாங்க அமைச்சின் செயலாளர் டொனால்ட் காம்ப் அடுத்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

'தற்போதய சூழ்நிலையைப் பயன்படுத்தி இலங்கை அரசு விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பது அவசியம் என்று வலியுறுத்தியுள்ள அவர், தவறின் இலங்கை அரசு சர்வதேச உதவிகளையும் ஆதரவையும் மட்டுமல்ல அமெரிக்காவின் ஒத்துழைப்பையும் முற்றாக இழக்கவேண்டி நேரிடும்' என அவர் விடுத்துள்ள எச்சரிக்கையானது அரசுக்கு மற்றொரு அழுத்தத்தை ஏற்படுத்தவே செய்யும்.

இன்றைய நிலையில் அமெரிக்க ஆதரவை இழப்பதென்பது இலங்கைக்கு உதவி வழங்கும் அமெரிக்க சார்பு நாடுகளினதும், ஐரோப்பிய ஒன்றியத்தினதும், ஏன் உலக வங்கிபோன்ற பொது அமைப்புக்களினதும் உதவிகளை இழப்பதற்கு சமனாகும் என்பதை அரசு அறிந்தேயிருக்கும்.

ஆனாலும், அரசு சமாதான முன்னெடுப்புக்களை - அமெரிக்காவினதும், நோர்வேயினதும் ஏனைய சமாதான முன்னெடுப்பை வலியுறுத்தும் நாடுகளினதும், விருப்பத்திற்கோ, வலியுறுத்தலுக்கோ அமைய மேற்கொள்ளுமோ என்பதே இன்றைய கேள்வியாகும். சமாதானப்பேச்சை வலியுறுத்தி எச்சரிக்கும் அமெரிக்கா, இன்னொரு புறம் இலங்கையரசுக்கும், இராணுவத்துககும் ஆயுத - இராணுவ தளபாடங்களையும், போர்க்கப்பலையும், பயிற்சிகளையும் வழங்கி அவர்களை யுத்த சன்னதர்களாக்கி வருவதும், ஒருமுரண்பாடான அமெரிக்க அணுகுமுறையையே வெளிப்படுத்தவும் செய்கிறது.

போர்நிறுத்த உடன்பாட்டில் 'இராணுவ சமநிலையை' விதியாகக் குறிப்பிட்டுள்ள நோர்வே அனுசரணையாளர்கள், அமெரிக்காவின் இந்த உதவிகளையும், அதனை இலங்கை பெற்றுக்கொள்வதையும் மௌனமாகப் பார்த்துக்கொண்டு இருப்பதானது, இராணுவச் சமநிலை குறைவதற்கு அங்கீகாரம் வழங்குகின்றதா என்ற சந்தேகத்தையும் ஏற்படுத்தவே செய்கின்றது.

இப்படியான சூழலில் உண்மையான சமாதானத்தை ஏற்படுத்த இலங்கையை வற்புறுத்தும் அமெரிக்கா, அர்த்தமுள்ள அமைதியை உறுதியாக இந்த நாட்டில் நிலைநாட்ட விரும்புகின்றதா என்ற கேள்வியையும் நமக்குள் எழவே வைத்துள்ளது.

ஆயுத - இராணுவ உதவிகளை வழங்கிவிட்டு ஏனைய உதவிகளை வழங்கமாட்டோம் என எச்சரிப்பதன்மூலம் இலங்கையை சமாதானப் பாதைக்கு இட்டுச் செல்லமுடியும் என அமெரிக்கா நினைத்தால், அதில் அது ஏமாந்தே தீரும். கடன் வாங்கயாவது யுத்தம் செய்யும் 'தர்மசிந்தனை' இலங்கையின் பௌத்த சிங்கள பேரினவாத அரசுகளின் பூர்வீகச் சொத்து என்பது அமெரிக்காவுக்கோ அதுபோன்ற நாடுகளுக்கோ தெரியவில்லை. அதுதான் பரிதாபகரமான விடயமாகும்.

# நாடும் நடப்பும்

செய்தி :- பேச்சுவார்த்தை தொடர்பான இந்தியாவின் யோசனைகள தமிழினத்திற்கு துரோகம் செய்வதுடன் விடுதலைப் புலிகளை வஞ்சம் தீர்க்கும் செயலாகும். —— குடாநாட்டு அரசியல் அவதானிகள். ——




# படையினரின் சீண்டுதல் தொடர்ந்தால் பாரதூரமான விளைவுகள் ஏற்படும்!

## அம்பாறை - அரசியற்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் எச்சரிக்கை

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் நிராயுதபாணிகளாகப் பயணம் செய்யும் விடுதலைப் புலிப்போராளிகளை, வீதிச்சோதனை என்ற போர்வையில் சோதனைக் கெடுபிடிக்குள்ளாக்கிவரும் விசேட அதிரடிப்படை மற்றும் பொலிஸாரின் நடவடிக்கை குறித்து, தமிழீழ விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் கடும் விசனமும், கண்டனமும் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் போராளிகளென உறுதிப் படுத்தப்பட்ட பின்னரும், படையினர் இத்தகைய சோதனை கெடுபிடிகளை மேற்கொள்வதாகவும்,

ஆண் விசேட அதிரடிப்படை மற்றும் பொலிஸார் இத்தகைய சோதனை நடவடிக்கைகளின்போது, தமது பெண் போராளிகளிடம் உடல் சோதனைக்கு முயன்றுள்ளதாகவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அக்கரைப்பற்றில் பொதுமக்களுடன் சேர்ந்து வந்த போராளிகளை, விசேட அதிரடிப் படையினரும், பொலிஸாரும் இவ்வாறான சோதனைக் கெடுபிடிக்குள்ளாக்கியுள்ளதுடன்,

கடந்த திங்கட்கிழமையும் தமது ஆண் - பெண் போராளிகளை இவ்வாறு சோதனைக்குள்ளாக்கியிருப்பதாகவும் அவர் கவலை தெரிவித்துள்ளார்.

மேலும், அடுத்தடுத்து இத்தகைய கெடுபிடிகளை விசேட அதிரடிப்படையினரும், பொலிஸாரும் மேற்கொண்டுவருவது ஏதோ ஒரு வகையில், எம்மைப் படையினர் சீண்டும் செயலென கருதவேண்டியுள்ளது.

எதிர்காலத்தில் இத்தகைய கெடுபிடிகளைப் படையினர் நிறுத்தவேண்டும். கண்காணிப்புக்குழு முன்னிலையிலேயே எமது போராளிகள் சோதனைக்குள்ளாக்கப்பட வேண்டுமெனவும் தெரிவித்துள்ள அரசியல்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன்,

இனிமேல் போராளிகள் இத்தகைய சோதனைகளுக்கு இசைந்து கொடுக்கமாட்டார்கள் என்றும், சீண்டுதல் தொடர்ந்தால் பாரதூரமான விளைவுகளைச் சந்திக்கவேண்டிய நிலை ஏற்படும் என்றும் எச்சரித்துள்ளார். (07)

# பதவி உயர்வில் பாரபட்சமா? பொலிஸ் ஆணைக்குழு மறுப்பு!

(கொழும்பு)

பொலிஸ் சேவையில் அண்மையில் ஏற்படுத்தப்பட்ட பதவி உயர்வுகள் பாரபட்சமானவை எனத் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டை - தேசிய பொலிஸ் ஆணைக்குழு கடுமையாக மறுத்துள்ளது.

இது தொடர்பாக ஆணைக்குழு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

கொன்ஸ்டபிள், சார்ஜன்ட், இன்ஸ்பெக்டர், பிரதம இன்ஸ்பெக்டர், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஆகிய தரத்திலுள்ளவர்களில் 2795 பேர் பதவி உயர்த்தப்பட்டனர். மிகுதியாகவுள்ள 1493 பேரின் தரங்கள் திருப்திகரமற்ற வகையில் இருந்ததால் அவர்களுக்குப் பதவி உயர்வு வழங்கப்படவில்லை.

இலங்கையின் பொலிஸ் சேவை வரவாற்றிலேயே ஒரே தடவையில் இவ்வளவு பெரிய தொகையினருக்குப் பதவி உயர்வு வழங்கியது இதுதான் முதற்தடவையாகும்.

இந்தப் பதவி உயர்வுகள் தொடர்பாக, ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜெயசூரியாவுக்கும், தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர் ரஞ்சித் அபேயசூரியாவுக்குமிடையில் கலந்துரையாடல் இடம்பெற்றதாகத் தெரிவிப்பதையும் மறுப்பதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அரசு – புலிகளுடனான சந்திப்பு தற்காலிகமாக இடைநிறுத்தம்!

## அமைச்சர் விதார் ஹெல்கிசன் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசு மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் ஆகிய இரு தரப்பினரையும் பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டுவர எடுத்த முயற்சி பலனளிக்காமையால், அவர்களுடனான சந்திப்பைத் தற்காலிகமாக இடைநிறுத்திக் கொள்ளப்போவதாக நோர்வே வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் தெரிவித்துள்ளார்.

கடந்த 31 ஆம் திகதியன்று, லண்டனில் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்துப் பேச்சு நடத்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்ததாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இரு தரப்பினரையும் சமாதானப் போச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டுவருவதறகு, தான் 5 தடவைகள் முயற்சி எடுதத போதும், கவலைப்படும் வகையில் இரு தரப்பினரும் பல நிபந்தனைகளை விதித்ததாகவும் இந்தச் சந்திப்பின்போது அவர் தெரிவித்தார்.

இதனால், குறிப்பிட்ட சில காலத்துக்கு இரு சாராரையும் சந்திப்பதை நிறுத்தியுள்ளதாகவும், இதனால் சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பது மேலும் தாமதமடையும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# பிளாஸ்ரிக் பண நோட்டுக்களை ஏற்கமறுக்கும் இலங்கை மக்கள்!

கிறடிற்காட்டை ஏற்றுக்கொண்டுள்ள இலங்கை மக்கள் ஆறு வருடத்துக்கு முன்னர் மத்திய வங்கி வெளியிட்ட பிளாஸ்ரிக்கிலான 200 ரூபா நோட்டினை ஏற்கவில்லையெனவும், இது பெருத்த தோல்வியில் முடிவடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கனடா மற்றும் அவுஸ்ரேலியா நாடுகளிலுள்ள நடைமுறைகளைக் கருத்திற்கொண்டு, இலங்கையிலும் இந்த 200 ரூபா பிளாஸ்ரிக் நோட்டைக் கடந்த ஆறு வருடத்திற்கு முன்னர் இலங்கையின் சுதந்திர பொன்விழாவை முன்னிட்டு மத்திய வங்கி வெளியிட்டது.

எவ்வாறெனினும், பரிசோதனை முயற்சியாக வெளியிடப்பட்ட இந்த நோட்டு தோல்வியில் முடிவடைந்துள்ளதாகவும் எனவே, இந்தத் திட்டத்தை தாம் கைவிட்டுள்ளதாகவும் நாணயக் கட்டுப்பாட்டாளரான எஸ்.விஜயசிங்க தெரிவித்தார்.

அவுஸ்ரேலிய கம்பனியொன்றினால் அச்சிடப்படும் இந்த நோட்டு, மிகவும் மெதுவாகவும், உறுதியற்ற வகையிலும் புழக்கத்தில் உள்ளதாகவும், பல பொதுமக்கள் இதனை ஏற்றுக்கொள்ள மறுப்பதாகவும் மத்திய வங்கியின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த நோட்டின் புழக்கம் கடந்த மார்ச் 2001 ஆம் ஆண்டில் 2.3 பில்லியனாக இருந்தது. ஆனால், 2003 டிசம்பரில் இது 998 மில்லியனாகக் குறைவடைந்தது. தற்போது இதன் புழக்கம் மேலும் குறைவடைந்துள்ளது.

வருடமொன்றுக்கு 20 பில்லியன் தாள் நாணயங்கள் மத்தியவங்கியினால் வெளியிடப்படுகின்றன. இந்த வெளியீட்டுக்கான பதிப்பகச்செலவுக்கு பத்து மில்லியன் டொலர் செலவழிக்கப்படுகிறது.

1948 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை 54 நோட்டுக்கள் மத்திய வங்கியினால் வெளியிடப்பட்டுள்ளன. இவற்றுள் 200 ரூபா நோட்டுக்கள் தவிர, எஞ்சியவை அனைத்துமே பருத்தியுடன் சேர்த்துத் தயாரிக்கப்பட்ட கடதாசி நோட்டுக்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**கலையும், பண்பாடும்...** - காவலூர் விஜேந்திரன்

# ஒரு இனத்தின் தனித்துவ அடையாளமாக விளங்கும் பாரம்பரியக் கலைகளும், கலைஞர்களும்...!

> **ஒவ்வொரு இனமும் தனது தனித்துவத்தை இழக்காது தனக்கென சில அடையாளங்களை வகுத்து நடைமுறைப்படுத்தி வருகின்றது. அந்த வகையில் தமிழர்களின் அடையாளச் சின்னமாக கிராமியக் கலைகள், கூத்துக்களைக் குறிப்பிட முடியும்.**



ஊர்வலத்தில் பங்கு கொண்ட காவடியும் கம்படி சிலம்படியும்

பாரம்பரிய கலை வடிவங்களை பாதுகாப்பதுடன் அவற்றின் அரங்கச் செயற்பாடுகளையும், வெளியீடுகளையும் கடந்த பத்து வருடங்களாக பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம் மேற்கொண்டு வருகின்றது. இவ்வாறு பாரம்பரிய கலைகளுக்கும் கலைஞர்களுக்கும் உயிர் கொடுக்கின்ற செயற்பாட்டினை பாரம்பரிய மேம்பாட்டுக்கழகம் செய்து வருகின்றதென்றால், அது மறுக்கப்பட முடியாத உண்மையாகவுள்ளது. ஒவ்வொரு இனமும் தனது தனித்துவத்தை இழக்காது தனக்கென சில அடையாளங்களை வகுத்து நடைமுறைப்படுத்தி வருகின்றது. அந்த வகையில் தமிழர்களின் அடையாளச சின்னமாக கிராமியக் கலைகள், கூத்துக்களைக் குறிப்பிடமுடியும்.

கூத்தாடுவதும், குந்தியிருப்பதும் ஆத்தாதவன் செயல் என்பதை பொய்ப்பிக்கும் வகையில் எமது கலை வடிவங்களை பல வழிகளில் பேணி வரும் பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகச் செயலாளரான செல்லையா - மெற்றாஸ் மயிலும் அவர் சார்ந்தவர்களும் நன்றியுடன் நினைவு கூரப்பட வேண்டியவர்கள். பாமர மக்களாலும், ஒரு சில சாதியினராலும் தான் பாரம்பரிய கலைகளை ஆட முடியும் என்ற மூடநம்பிக்கையை போக்கி நகர்ப்புற மகளையும் இந்தக் கலை வடிவங்களில் இணைத்த பெருமை இந்த கழகத்துக்குமுண்டு.

சென்ற மாதம் 16,17,18 ஆம் திகதிகளில் நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தின் பத்தாண்டு நிறைவு விழா இடம்பெற்றது.

இதில் கலைஞர்கள் கௌரவிப்புடன் பரிசளிப்பு விழாவும் இடம்பெற்றது. மூன்று நாட்கள் இடம்பெற்ற இந்த நிகழ்வுகளில் துறைசார் மூத்த கலைஞ்களில் பத்தொன்பது பேருக்கு பொன்னாடை போர்த்தி மகுடம் சூட்டி மரபுக் கலைச்சுடர் என்ற கௌரவப் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டது. இவர்களை சிறப்பிக்கும் வகையில் இசைநாடக மேடைப் பாடல்களும் போட்டிகளில் முதல் இடங்களைப்பெற்ற கூத்து, இசை நாடகங்களும் ஆற்றுகை செய்யப்பட்டன.

கிராமியக் கலைப் போட்டிகள் நாட்டுக் கூத்து இசை நாடகப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டியவர்களுக்கு பணப் பரிசு, சான்றிதழ், தங்கப் பதக்கம், விருதுகள் வழங்கி கௌரவித்தமையானது, பல இளம் கலைஞர்களை இனம் காட்டியதுடன் பலரையும் முனைப்புடன் இந்த கலை வடிவங்களைத் தொடர அடித்தளம் இடப்பட்டதென்றே கூற வேண்டும். இசை நாடகம், காத்தவராயன், சிந்துநடைகூத்து, கூத்து, வில்லுப்பாட்டு, ஆர்மோனியம், ஒப்பனை, சிற்பம் ஆகிய துறைசார் கலைஞர்களுக்கே கௌரவிப்பும் மகுடம் சூட்டும் நிகழ்வும் இடம்பெற்றது.

முதல் நாள் நிகழ்வில் திரேசம்மா - கொழும்புத்துறை (நாட்டுக் கூத்து), வெ.கெங்காதரன் - யாழ்ப்பாணம் (சிற்பம்), அ.இராசரத்தினம் - சாந்தை, பண்டத்தரிப்பு (காத்தவராயன்), பெஞ்சமின் - யாழ்பபாணம் (ஒப்பனை), எஸ்.சிவக்கொழுந்து - பருத்தித்துறை (இசை நாடகம்), இ.ஸ்ரீதரன் - யாழ்ப்பாணம் (வில்லுப் பாட்டு) ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.

மாதனை வேணுகான சபாவின் காத்தவராயன் சிந்துநடைக்கூத்தும், நாவாந்துறை புனித நீக்கிலஸ் நாடக மன்றத்தினரின் ஏரோடியாள் சபதம் என்ற நாட்டுக் கூத்தும் சிறப்பு நிகழ்வாக ஆற்றுகை செய்யப்பட்டன.

இரண்டாம் நாள் நிகழ்வில் திருமதி சி.இராஜேஸ்வரி - பாஷையூர் (நாட்டுக்கூத்து), செ.வேணுகோபால் - நீர்வேலி (காத்தவராயன்), க.சரவணமுத்து - தெல்லிப்பளை (இசை நாடகம்), ம.கந்தையா - சரவணை (இசைநாடகம்), சி.செல்லையா-பளை (ஆர்மோனியம்) ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர். இணுவில் கந்தசுவாமி கோவில் தொண்டர் சபையினரின் அரிச்சந்திரா மயான காண்டம் இசை நாடகமாக மேடை ஏற்றப்பட்டது.

மூன்றாம் நாள் நிகழ்வுகளில் எஸ்.தேவராசா - அளவெட்டி (இசை நாடகம்), க.கனகரெத்தினம் - நல்லூர் (இசைநாடகம்), மு.அருட்பிரகாசம் - பாஷையூர் (நாட்டுக்கூத்து), இ. கிறிஸ்தோபர் - குருநகர் (நாட்டுக்கூத்து), பி.யோண்கவாஸ் - உரும்பிராய் (ஆர்மோனியம்), சி.கணபதிப்பிள்ளை (சின்னமணி)- அச்சுவேலி (வில்லுப்பாட்டு), எஸ்.சற்குணநாதன் - மயிலங்காடு (ஆர்மோனியம்) ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர். நடிக கலாமணி அரியாலையூர் செல்வம் குழுவினரின் சத்தியவான் சாவித்திரி இசை நாடகமும் இறுதி நாள் சிறப்பு நிகழ்வாக ஆற்றுகை செய்யப்பட்டது. ஐந்து பெண்கள் ஒரே நேரத்தில் கிராமிய பாடலுக்கு இசைவாக ஒரு உரலில் ஐந்து உலக்கையால் மா இடித்தல் நிகழ்வும் இடம்பெற்றது.

இறுதி நாள் நிகழ்வில் 300 பாரம்பரிய கலைஞர்களை உள்ளடக்கியதான பல்வேறு, பாரம்பரிய கலைஞர்களின் கிராமியக் கலைப் பண்பாட்டு நிகழ்வுகளின் ஊர்வலம் சட்டநாதர் கோவில் முன்றலில் ஆரம்பித்து பருத்தித்துறை வீதி வழியாக நல்லூர் முருகன் ஆலய முன்றலில் நிறைவடைந்தது. 5 வயது முதல் 25 வயதுக்குடபட்ட இளைஞர், யுவதிகள், பாடசாலை மாணவர்கள் என ஊர்வலத்தில் காவடி, கரகாட்டம், கோலாட்டம், சுளகாட்டம், முகமூடியாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம், கும்பி, செம்பு நடனம், கம்படி சிலம்படி என பல வகையான கிராமிய கலை வடிங்களை தாங்கியவாறு வலம் வந்தனர்.

மகுடம் சூட்டி மரபுக் கலைச் சுடர் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டவரும் மூத்த இசை நாடக நடிகருமான கதிரன் - சரவணை முத்து (வாத்தி) 56 (மாவை கலட்டி தெல்லிப்பளை) இந்த நிகழ்வுகள் தொடர்பாக எம்முடன் பகிர்ந்து கொண்டவற்றை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கிறோம். கிராமியக் கலைகள் எமது பரம்பரையானது. முன்னோர்களால் பேணி பாதுகாத்து கட்டி வளர்க்கப்பட்ட இந்தக் கலை வடிவங்கள் இன்றைக்கு மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் தென் இந்தியத் திரைப்படங்களின் ஆக்கிரமிப்பினால் அடக்கப்பட்டதென்றே கூற வேண்டும்.



கதிரவன் சரவணமுத்து - 56 இசைநாடக நகைச்சுவை நடிகர், தெல்லிப்பளை.

கிராமப்புறங்களில் இசைநாடகங்கள் இரவு முழுவதும் மூத்த கலைஞர்களால் ஆற்றுகை செய்யப்பட்டு வந்தன. அதேபோல் கோயில் திருவிழாக்களில் கிராமியக் கலை வடிவங்கள் ஆடப்பட்டு வந்தன. இவை நாளடைவில் நலிவடைந்து போயின.

இதற்கு ரசிகர்களின் வித்தியாசமான ரசிப்புத் தன்மையும் பொழுதுபோக்கு சாதனங்களின் வருகையுமே காரணமெனலாம். எமது பாரம்பரியத்தை நாம் பாதுகாக்க வேண்டும். நலிவடைந்து போயுள்ள கலை வடிவங்களை நல்ல நிலைக்கு கொண்டுவர வேண்டும். இன்றைய இளம் சமூகம் தொலைக்காட்சி மோகததிலுள்ளது. இவர்களுக்கு எமது பாரம்பரிய கலைவடிவங்களைப் புகட்ட வேண்டுமென்றால் இவ்வாறான போட்டி நிகழ்வுகளும், ஊர்வலங்களுமே காலத்திற்கேற்ற பொருத்தப்பாடாக அமையும் என தனது கருத்தை நிறைவு செய்தார்.



ஊர்வலத்தில் பங்கு கொண்ட சிறுவர்களின் கரகாட்டம்

போட்டியில் வெற்றிபெற்ற மூன்று பேருக்கு 5000/=, 3000/=, 2000/= பணப்பரிசு வழங்கப்பட்டதுடன் ஆறுதல் பரிசாக 1500/= பணத்தொகையும் வழங்கப்பட்டன. இவற்றுடன் ஊர்வலத்தில் பங்கு கொண்டவர்களில் பத்து போட்டியாளர்களுக்கு 1500/= ரூபாவீதம் பணத் தொகை வழங்கப்பட்டது. சிறந்த நடிகர்களுக்கு தங்கப்பதக்கம அணிவித்ததுடன் நினைவு விருதுகளும் வழங்கி கௌரவித்தமையானது, கலைஞர்களுக்கும் கலை வடிவங்களுக்கும் கிடைத்த வரவேற்பென்றே கூறவேண்டும்.

பாரம்பரிய கலைகளையும், கலைஞர்களையும் வருடாவருடம் ஒன்று சேர்த்து மேற்கொள்ளப்படும் இம்மாதிரியான நிகழ்வுகள் காலத்துக்கேற்ற ஒன்று. தனியே போட்டிகளையும், வெளியீடுகளையும், கௌரவிப்புக்களையும், ஆற்றுகைகளையும் மேற்கொண்டபோதிலும் இந்தக் கலை வடிவங்கள் கல்விக் கொள்கையில், இடம் பெறுவதாக தெரியவில்லை. இன்றைய சமூகத்தவர்கள் ஒன்றை எதிர்பார்த்தே அதில் தம்மை இணைத்துக் கொள்வார்கள். அந்த வகையில் வட-இலங்கை சங்கீத சபையினர் இந்தக் கலைவடிவங்களையும், எமது போட்டிகளில் இணைத்துக்கொள்ள வேண்டும். யாழ்.பல்கலைக்கழகத்தின் நாடக அரங்கியல் துறை மாணவ்களுக்கு துணைப்பாடமாக கொண்டு வரவேண்டும். இராமநாதன் நுண் கலைக்கழக இசைத் துறையினரும், இந்தக் கற்கை நெறிகளை கற்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறான செயற்பாடுகளை பொறுப்பானவர்கள் பொறுப்புடன் செயற்படுத்துவார்களாயின் இளம் சமூகம் இந்தக் கலை வடிவங்களை தமதாக்கி செயற்படுத்த முடியும்.

தம்பித்துரை - பிரதீபன் 22 (நாடக நடிகர்) அச்சுவேலி. இந்த மூன்று நாள் நிகழ்வுகளிலும் முழுமையாக பங்கு கொண்ட ஒரு கலைஞர் என்ற வகையில் தனது கருத்துக்களை எம்முடன் பகிர்ந்து கொள்கிறார்.

எமது பாரம்பரிய கலைகள், கிராமியக் கலை வடிவங்களை ஓரளவேனும் ஒன்று சேர காண முடிந்தமையானது, நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களின் முயற்சி வீண் போகவில்லை என்றே கூறத் தோன்றுகிறது. சில நிகழ்ச்சிகளை சுவைபட ரசித்துப் பார்க்க முடியாத தன்மையை அவதானிக்க முடிந்தது. முதல் நாளில் இறுதி நிகழ்வாக கூத்து இடம்பெறுகையில் மண்டபத்தில் வெறும் 18 பேரையே காணமுடிந்தது.

750 பேர் அமரக் கூடிய இந்த மண்டபத்தில் இவ்வாறான மாற்றத்துக்கு இரண்டு வகையான காரணங்களை முன்வைக்கலாம். ஒன்று இன்றும் இவ்வாறான கலைவடிவங்களை நேசிக்கும் மக்களாக இவர்கள் மாறவில்லை. நிகழ்வுகளில் ஏற்பட்ட எதிமாறான ரசிப்புத் தன்மையும் எதிர்பார்த்த வடிவங்கள் கிடைக்காமையுமே காரணங்களாக கொள்ளலாம.



மூத்த கலைஞர் ஒருவருக்கு மகுடம் சூட்டி மரபுக் கலைச்சுடர் பட்டம் வழங்கப்படுகிறது.

இருநாள் நிகழ்வுகளையும் விட இறுதிநாள் நிகழ்வு சிறப்பாக அமைநதது. அதிலும் ஊர்வலத்தை கொண்டு வந்த பிரதான வீதியை அரங்காகப் பாவித்தமை பாராட்டிற்குரியது. இருந்தும் ஊர்வலத்தை ஒழுங்கமைத்த முறைக்ளில் மாற்றங்கள் செய்திருக்க வேண்டுமென்பது எனது கருத்து மட்டுமன்றி பங்கு பற்றிய கலைஞர்கள், ஆசிரியர்களின கருத்தும் கூட. தூர இடங்களில் இருந்து கலைஞர்களை வரவழைத்து அவர்களை அவமதித்த மாதிரியான சம்பவங்களையும் அவதானிக்க முடிந்தது. ஊர்வலத்தை மூத்த கலைஞர்களைக் கொண்டு செய்திருந்தால் இன்னும் சிறப்பாக அமைந்திருக்கும் என தனது கருத்தை நிறைவு செய்தார் பிரதீபன்.

மூத்த கலைஞர்களைத் தேடிப் பிடித்து அவர்களை கௌரவிப்பதும், அவர்கள் சார்பான நூல்களை வெளியிடுவதும், அவர்களது குரல்களைக் கொண்டே ஒலி நாடாக்களை ஆவணப்படுத்துவம் என தனது வாழ்வை பாரம்பரிய கலைக்காக அர்ப்பணித்துச் செயற்படும் கலாபூசணம் செல்லையா - மெற்றாஸ் மயிலை தனியே பாராட்டுவதுடன் நின்றுவிடாது, அவருக்கும் பாராட்டு விழா ஒன்றினை ஏற்படுத்த வேண்டும். கலைக் காவலனை இவ்வாறு களிப்புறச் செய்ய வேண்டும்.

நடந்து முடிந்த மூன்று நாள் நிகழ்வுகளிலும் இசை நாடகத்துக்கு முக்கியத்துவம் கொடுத்தமை ஏனைய துறைசார் கலைஞர்களுக்கு மனக்கசப்பை ஏற்படுத்தியதை அவதானிக்க முடிந்தது. இசைநாடக மேடைப பாடல்களையும், ஒரு சிலரே மீண்டும் மீண்டும் பாடியமை சற்று சலிப்படையச் செய்தது. ஆற்றுகையின் போது அரங்கில் கையாளப்பட்ட அரங்கப் பொருட்களும் பார்வையாளர்களுக்கு சோர்வை ஏற்படுத்தின.

ஊர்வலத்தை தொடராக விட்டு முடிவு இடத்தை விஸாசமாக அமைதது அதில் தெரிவுகளை செய்தால் சிறப்பாக அமைந்திருக்கும். தொடரான அணிவகுப்பையே பார்வையாளர்கள் எதிர்பார்த்து காத்திருந்தமை இங்கு குறிப்பிடபடவேண்டிய ஒன்று.

காலத்துக்குக்கேற்ப கட்டாயமான ஒரு நிகழ்வை ஒழுங்கமைத்து செயற்படுத்திய பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்துக்கும் இந்த நிகழ்வுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கியவர்களுக்கும் பாரம்பரிய கலை ஆர்வலர்கள் என்றைக்கும் கடமைப்பட்டவர்களாகவே உள்ளனர். நாமும் நமக்கோர் நலியாக் கலையுடையோம் என்பதற்கிணங்க இவ்வாறான செயற்பாடுகள் இடம் பெறுவதன் மூலம் எமது தனித்துவத்தை, இனம்காட்டும் அடையாளங்களை எம் மத்தியில் நிலை நிறுத்த வேண்டும். ❄❄❄

# அல்கொய்டாவின் தாக்குதல் அச்சம் அமெரிக்கா அபாய நிலையில் உள்ளது



## ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் எச்சரிக்கை



(வொஷிங்டன்)

அமெரிக்கா மிகவும் அபாய நிலையில் இருப்பதாகவும், அல்கொய்டா அமைப்பினர் அமெரிக்க நகரங்கள் மீது தாக்குதல் நடத்தக் கூடிய சாத்தியங்கள் இருப்பதாகவும் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் எச்சரித்துள்ளார்.

அமெரிக்காவின் பாதுகாப்பினை வலுப்படுத்துவதற்கு அதிபர் புஷ் - அமெரிக்க தேசியப்புலனாய்வுத் துறைப் பணிப்பாளரை நியமிக்கவுள்ள நிலையில், புஷ் தெரிவிக்கையில் அமெரிக்கா இன்னமும் பாதுகாப்பு அச்சுறுத்தலிலிருந்து விடுபடவில்லை எனத் தெரிவித்தார்.

அமெரிக்காவின் மூன்று நகரங்களின் பாதுகாப்பு மிகவும் அதி உச்ச நிலையில் வைக்கப்பட்டுள்ளது. இதில் அமெரிக்காவின் நிதி நிறுவனங்களுக்கான பாதுகாப்பும் அடங்கும்.

அல்கொய்டா அமைப்பினர் வொஷிங்டன், நியூயோர்க் மற்றும் நியூஜேசி நகரங்களிலுள்ள கட்டடங்களைத் தாக்கக்கூடுமென்பதனால், அமெரிக்காவின் பாதுகாப்பு இரண்டாவது அதி உச்ச நிலையான ஒரேஞ் நிலைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்த அதி உச்சப் பாதுகாப்பு நிலை எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள -அமெரிக்க ஜனாதிபதி தேர்தல்வரை தொடருமென வொஷிங்டனின் பொலிஸ் அதிகாரி சார்லஸ் ரம்சே பி.பி.ஸிக்குத் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும்வேளை, அல்கொய்டா அமைப்பினர் தாக்குதலை நடத்தி மக்களின் புலனை வேறு இடத்திற்குத் திசை திருப்பி விடாமல் இருப்பதற்காகவே நவம்பர் வரை பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த வாரம் பாகிஸ்தானில் கைது செய்யப்பட்ட அல்கொய்டா அமைப்பின் முக்கிய சந்தேக நபரின் தகவலின்படி, அமெரிக்கா மற்றும் பிரிட்டன் நாடுகளிலுள்ள கட்டடங்களை அல்கொய்டா தாக்கத் திட்டமிட்டிருப்பதாக அவரது ஆவணங்களிலிருந்து தெரியவந்துள்ளதாக பாகிஸ்தானின் தகவல்துறை அமைச்சர் சேக் ரஷீத் அகமட் தெரிவித்தார்.

அமெரிக்காவின் மூன்று நகரங்களிலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டாலும், இந்த நகரங்களில் தொழில்புரியும் வர்த்தகர்கள் மற்றும் பிற பணியாளர்கள் வழமையாகவே தமது கடமைகளுக்குச் சென்று வரலாமெனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.




நியூயோர்க் பொலிஸார் நிதி நிறுவனக் கிளைகள் உள்ள பல வீதிகளை மூடி வாகனப் போக்குவரத்துக்கு தடைசெய்துள்ளனர். பொலிஸாரின் பாதுகாப்புக்கு உதவியாக ஹெலிகொப்ரர்கள் வானத்தில் வட்டமிட்டு மேலதிக பாதுகாப்பை வழங்கி வருகின்றன.

வாகனம் மூலம் தாக்குதல் நடத்தப்படலாமெனவும், இராசயன, உயிரியல் ஆயுதத் தாக்குதல் நடத்தப்படலாமெனவும் எதிர்பார்த்து அமெரிக்கப் படையினர் எந்த நேரமும் உசார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

அமெரிக்காவின் பங்குச் சந்தை எந்தவிதத்திலும் தளர்வடையாத நிலையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப் பட்டுள்ளதாகவும், பயங்கரவாதிகளால் எம்மை அடிபணிய வைக்கமுடியாதெனவும் நியூயோர்க் மேஜர் மைக்கல் புளூம் பேர்க் தெரிவித்தார்.

வொஷிங்டனிலுள்ள உலக வர்த்தக தலைமைப் பணிமனையில் பணிபுரியச் செல்லும் சகல பணியாளர்களும் அவர்களது ஆவணங்களும், பொலிஸாரால் சோதனையிடப்பட்டு வருகின்றன.

இதேவேளை, புதிதாக நியமிக்கப்பட்ட புலனாய்வு அதிகாரி தெரிவிக்கையில் - அமெரிக்காவிலுள்ள பயங்கரவாத எதிர்ப்பு நிலையம்- பயங்கரவாதிகளின் செயற்பாடுகள் தொடர்பான தகவல்களைத் திரட்டி வருகிறது.

எங்களது சக்திக்குட்பட்ட வகையில் பயங்கரவாதிகளின் எந்தச் செயற்பாட்டையும் எதிர்கொள்ள நாம் தயாராக உள்ளோம். எதிரிகளின் பிடியிலிருந்து எமது மக்களைப் பாதுகாத்து அவர்களை நீதிக்கு முன்நிறுத்தும் எமது செயற்பாட்டில் நல்ல முன்னேற்றமுள்ளது.

அமெரிக்காவின் மூன்று நகரங்கள் மீது நடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ள அண்மைய தாக்குதல் எச்சரிக்கையானது. நாடு எவ்வளவு தூரம் பாரதூரமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதென்பதனை எமக்கு ஞாபகமூட்டுகின்றதெனவும் அவர் தெரிவித்தார்.



ஈராக்கில் லொறி சாரதியாக பணியாற்றி வந்த துருக்கி நாட்டைச் சேர்ந்த முராத் யூஸ் என்பவரை தீவிரவாதிகள் கடத்திச் சென்று சுட்டுக்கொன்றனர். இந்தக் காட்சியை பார்த்து துருக்கியில் உள்ள முராத் யூஸின் மனைவி லைலா கதறி அழுகிறார். அவருக்கு உறவினர்கள் ஆறுதல் கூறும் காட்சி.

### ஈராக் மக்களுக்கு நட்டஈடு வழங்க வேண்டுமென்ற

## கிளர்ச்சிவாதிகளின் கோரிக்கையை குவைத் கம்பனி ஏற்றுக்கொண்டது!

(ஈராக்)

ஈராக்கில் உள்ள குவைத் நிறுவனத்தில் சாரதிகளாக வேலை பார்த்த திலக்ராஜ், அந்தர்யாமி, சுக்தேவ்சிங் ஆகிய 3 இந்தியர்களையும், 3 கென்ய நாட்டவர்களையும், ஒரு எகிப்து நாட்டவரையும் தீவிரவாதிகள் கடத்தச் சென்றனர். கடத்தப்பட்ட 7 பேரையும் விடுதலை செய்யவேண்டுமானால், ஈராக்கில் இருந்து அந்த குவைத் நிறுவனம் வெளியேறவேண்டும். பலூஜா நகரில் அமெரிக்கப் படையினரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கோடிக் கணக்கில் நஷ்டஈடு வழங்க வேண்டும் என்பது உடபட பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்றவேண்டும் என்று நிபந்தனை விதித்தனர்.

கோரிக்கைகளை நிறைவேற்றாவிட்டால் பணயக் கைதிகள் ஒவ்வொருவரையும் தலைதுண்டித்து கொலை செய்வதாகவும் தீவிரவாதிகள் மிரட்டல் விடுத்தனர்.

கடந்த 14 நாட்களாக தீவிரவாதிகளின் பிடியில் இருக்கும் பணயக் கைதிகளை மீட்க தொடர்ந்து இந்தியா முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

பலூஜா நகரில் பாதிக்கப்பட்ட ஈராக் மக்களுக்கு நஷ்டஈடு தொகை வழங்குவதில்தான் உடன்பாடு ஏற்படாமல் இருந்தது. இப்போது நஷ்டஈட்டுத்தொகை முழுவதையும் வழங்குவதாக குவைத் நிறுவனம் தெரிவித்துவிட்டது. இதைத் தொடர்ந்து பாதியில் நின்றுபோன சமரசப் பேச்சுவார்த்தை மீண்டும் தொடங்கி இருக்கிறது. தீவிரவாதிகள் சார்பில் நியமிக்கப்பட்ட பழங்குடி இனத்தலைவர் ஷேக் அல் துலைமாவும் மீண்டும் பேச்சுவார்த்தைக்கு திரும்பி விட்டார்.

இந்திய அரசும் பணயக் கைதிகளை விடுவிக்க புதிய முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. ஆனால், அதன் விபரங்களை வெளியிட முடியாது என்றும், வெளியுறவுத் துறை துணை அமைச்சர் அகமட் தெரிவித்தார். பணயக் கைதிகள் அனைவரும் நலமுடன் இருப்பதாகவும், அதிகாரிகளுக்கு தகவல் வந்துள்ளதாகவும் அகமட் தெரிவித்தார்.

இந்த நிலையில் கடத்தப்பட்ட 7 பணயக் கைதிகளையும் தீவிரவாதிகள் புதிய இடத்துக்கு மாற்றி உள்ளனர். பேச்சுவார்த்தை சுமுகமாக நடப்பதற்கு ஏதுவாகத்தான் பணயக் கைதிகள் வேறு இடத்துக்கு மாற்றப்பட்டுள்ளனர் என்றும், தீவிரவாதிகள் தெரிவித்துள்ளனர். பணயக் கைதிகள் நலமுடன் இருக்கிறார்கள். அவர்களுக்கு எந்த ஆபத்தும் இல்லை என்று பழங்குடி இனத் தலைவர் ஷேக் அல்துலைமாவும் தெரிவித்திருக்கிறார்.

### பலஸ்தீன வைத்தியசாலையில்

## சிகிச்சை பெற்று வந்த ஒருவர் ஆயுததாரிகளால் சுட்டுக்கொலை



பலஸ்தீனத்தின் காஸாப் பகுதியிலுள்ள வைத்தியசாலையில் சிகிச்சைப்பெற்று வந்த ஒருவர், இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இவ்வாறு சுட்டுக்கொல்லப்பட்டவர் இஸ்ரேல் இராணுவத்துக்குத் தகவல்களை வழங்கி வருபவரெனத தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இஸ்ரேல் இராணுவத்தினருக்கு தகவல் வழங்குபவரென சந்தேகிக்கப்படும் ம.்.மூட் அல் சரீப் என்ற பலஸ்தீனர், பலஸ்தீனத்திலுள்ள சிறையில் இருந்த வேளை பொலிஸார் ஒருவர் நடத்திய கிரனைட் தாக்குதலில் படுகாயமடைந்தார்.

இவருடன மேலும் ஆறு கைதிகள் இந்தத் தாக்குதலில் படுகாயமடைந்ததுடன், பின்னர் ஒருவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்தவர்களில் நால்வர் இஸ்ரேல் இராணுவத்துக்கு தகவல் வழங்குபவர்களென குற்றஞ்சாட்டப்பட்டுள்ளதாக பலஸ்தீன பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, ஞாயிறு இரவு இஸ்ரேல் படையினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் பலஸ்தீன பெண்ணொருவர் உயிரிழந்தார். இந்தப் பெண் தனது வீட்டில் இருந்தவேளை இஸ்ரேல் படையினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் ரவை யன்னலூடாகச் சென்று தாக்கியதாக தெரிவிக்கப்படுகிறது.

மற்றொரு சம்பவத்தில் இஸ்ரேல் படையினர் நடத்திய தாக்குதலில் மூன்று ஆயுததாரிகள் காஸாவின் ஜெவிஸ் குடியிருப்பிற்கருகில் கொல்லப்பட்டனர்.

சுட்டுக்கொல்லப்பட்ட இந்த மூவரும் தமது அமைப்புக்களைச் சேர்ந்தவர்களென ஜிகாத்தும், அல் அக்ஷா மார்ட்டியஸ் பிரிகேட்டும் உரிமை கோரியுள்ளன.

## 'த விலேஜ்' படம் வசூலில் சாதனை

(லொஸ்ஏஞ்சல்ஸ்)

சென்னையில் பிறந்து ஹொலிவூட் சினிமாவில் புகழ் கொடி நாட்டிய நைட்சியாமளனின் புதியபடமான தவிலேஜ் வெளியான 3 நாட்களில் 575 கோடிரூபாய் வசூலாகி சாதனை படைத்துள்ளது. அவரது முந்தய படமானது சைன்ஸ் படம் இரண்டாயிரத்து 580 கோடி சம்பாதித்தது குறிப்பிடத்தக்கது.

## டர்பூர் பிரதேச பாதுகாப்பினை இருமடங்காக அதிகரிக்க திட்டம்

### சூடான் அரசாங்கம் அறிவிப்பு

டர்பூர் பிரதேசத்தின் பாதுகாப்பினைக் கருத்திற்கொண்டு, படையினரின் எண்ணிக்கையை இருமடங்காக அடுத்த நான்கு மாதத்திற்கு அதிகரிக்கவுள்ளதாக சூடான் அதிகாரசபை அறிவித்துள்ளது.

இந்த அறிவிப்பு சூடானிய அரச அதிகாரிகளுக்கும், ஐ.நாவின் பிரதிநிதி ஜான் பிறோங்கிற்குமிடையில் சூடான் தலைநகரில் நடநத கூட்டத்திற்குப் பின்னர் வெளிவந்துள்ளது.

ஜான் ஜாவீட் ஆயுதக் குழுவிடமிருந்து சூடான் அரசாங்கம் 30 நாட்களுக்குள் ஆயுதங்களைக் களைய வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டுள்ளது.

டர்பூர் பிரதேசத்திலுள்ள மக்களின் பாதுகாப்பினை அதிகரிக்க வேண்டுமென - ஐ.நாவிற்கும், சூடான் அரசிற்குமிடையே கடந்த மாதம் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையை அமுல்படுத்துவதில் சாதகமான முன்னேற்றநிலை ஏற்பட்டுள்ளதாக பிறோங் பி.பி.ஸிக்கு தெரிவித்தார்.

டர்பூர் பிரதேசத்தில் இடம்பெயர்ந்து வாழும் மக்களை அவர்களது வீடுகளுக்கு திரும்பிச்செல்லுமாறு சூடான் அரசாங்கம் வற்புறுத்தியதை கடந்த வாரம் காணமுடியவில்லையெனவும் அவர் தெரிவித்தார்.

டர்பூர் பிரதேசத்தை சூழ பல ஆயுததாரிகள் உள்ளனர். இதனால், மிகப்பெரிய பாதுகாப்பற்ற சூழல் அங்குள்ளது. ஆனாலும், அகதி முகாமுக்கு வழங்கப் பட்டிருக்கும் பாதுகாப்பு முன்னேற்றமடைந்துள்ளதெனவும் பிறோங் தெரிவித்தார்.

ஆயுததாரிகளினால் இடம்பெயர்ந்து டர்பூர் பிரதேசத்தில் தங்கியுள்ள மக்களின் பாதுகாப்பை முன்னேற்றுவது தொடர்பாக, கூட்டத்தில் உடன்பாடு காணப்பட்டதாக சூடான் வெளியுறவு அமைச்சர் முஸ்தபா ஒஸ்மான் இஸ்மாயில் தெரிவித்தார்.

இதேவேளை, இந்த 30 நாள் அவகாசமென்பது யுத்த பிரகடனம் எனவும், எந்தவொரு வெளிநாடு தலையிட்டாலும் அதனை எதிர்ப்போம் எனவும் சூடான் படையினர் தெரிவித்தனர்.

டர்பூர் பிரதேசத்தில் பெய்து வரும் கடும் மழைகாரணமாக உணவுப்பொருட்களை வீதியால் எடுத்துச்செல்லமுடியாத நிலையில், ஐ.நாவின் உலக உணவு ஸ்தாபனம் விமானமூலம் அந்தப்பகுதி மக்களுக்கு உணவு விநியோகத்தை மேற்கொண்டு வருகிறது.

நைஜீரியா, தென் ஆபிரிக்கா மற்றும் ருவாண்டா ஆகிய நாடுகள் இணைந்து 300 படையினரை யூலை இறுதிக்குள் டர்பூர் பிரதேசத்திற்கு அனுப்புவதாக உறுதியளித்த போதிலும், இதுவரை அந்தப் படைகள் அங்கு செல்லவில்லை.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

### மட்டு. சிறையில் வைக்கப்பட்டிருந்த

# கருணா அணியினர் மூவருக்கு நீதிமன்றம் பிணை வழங்கியது!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த கருணா அணியைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படும் அனைவரையும் பிணையில் செல்ல மட்டக்களப்பு நீதிமன்றம் நேற்று அனுமதியளித்தது.

கடந்த மார்ச் மாதம் 30 ஆம் திகதி ஆயுதங்களுடன் காத்தான் குடிப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட இவர்களை, கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய பிணையில் செல்ல அனுமதி வழங்கப்பட்டது.

மயூரன், மனோகர், குருபரன் ஆகிய மூவரையும் தலா 50 ஆயிரம் ரொக்கம் மற்றும் இரு ஆட்பிணைகளை வழங்கி பிணையில் விடுமாறும், மாதத்தில் கடைசி ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் உள்ள சி.ஐ.டி.தலைமை அலுவலகத்தில் ஆஜராக வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டது.

இவர்களை பிணையில் அழைத்துச் செல்ல எவரும் நீதிமன்றத்துக்கு வராதபடியால் மீண்டும் சிறைச்சாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். குறிப்பிட்ட நபர்களுடன் கைதான முதலாவது சந்தேக நபரான சச்சுமாஸ்ரர் கடந்த 15 ஆம் திகதி சிறைச்சாலைக்குள் கைதி ஒருவரால் சுட்டுக்கொல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

### டிசெம்பர் 31 ஆம் திகதிக்குள்

# ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை!

பாடசாலைகளில் நிலவுகின்ற ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஆலோசனையின் பெயரில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

தேசிய பாடசாலைகள் நவோதய பாடசாலைகள் உட்பட, ஏனைய பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு, இந்த வருடம் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பணித்துள்ளதாக கல்வி அமைச்சுக்கு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் சில வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டிருந்த கல்விச் சீர்திருத்த வேலைகளை நடைமுறைப்படுத்துவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

ஆசிரியர் பற்றாக்குறையே இதற்குக் காரணம் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

## கிளிநொச்சி செயலகம் நேற்று ஸ்தம்பித்தது!

கிளிநொச்சி மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் நேற்று அந்த மாவட்ட அரச செயலகம் முன்பாக போராட்டம் ஒன்றை நடத்தினர்.

தமது நியமனங்கள் தொடர்பாக அரசு முறைகேடாக நடந்துகொண்டதைக் கண்டித்து நேற்று இந்தப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

பட்டதாரிகளின் போராட்டம் காரணமாக கிளிநொச்சி அரச செயலகம் முற்றாகச் செயலிழந்தது என்று தெரிவிக்கப்படுகிறது.

புதுப்பொலிவுடன் யாழ்ப்பாணத்தில்
FedEx
Express
விரைவானது பாதுகாப்பானது நம்பகமானது
இப்பொழுது உலகின் எப்பாகத்திற்கும்
விரைவாக பொதிகள், கடிதங்களை
அனுப்பிட நீங்கள் நாடவேண்டிய
ஒரே ஸ்தாபனம்
THIRUMURUGAN COM NET
Opposite Diolag phone shop
259,கே.கே.எஸ் றோட்,
யாழ்ப்பாணம்.
T.P: 021 222 7835
Fax:021 222 7836
பலநோக்கு கூ.ச. முன்பாக
46, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்
T.P: 021 222 7560
Fax:021 222 7310
E.mail:thirumurugan5@lycosmail.com

### புலிகளைச் சோதனையிடும்

# பொலிஸ் தரப்பின் நிலைப்பாட்டுக்கு அரசியற்துறையினர் கடும் எதிர்ப்பு!

(வவுனியா)

சாதாரண பொதுமக்களைப் போல் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் போராளிகளையும் சோதனையிட வேண்டும் என்ற பொலிஸாரின் வேண்டுகோளுக்கு வவுனியா மாவட்ட அரசியல்துறையினர் தமது ஆட்சேபத்தை வெளியிட்டுள்ளனர்.

வவுனியாவில் நேற்று இராணுவத் தரப்புக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறையினருக்கும் இடையில் சந்திப்பொன்று நடைபெறவிருந்தது. ஆனால், இராணுவத்தினர் வராததன் காரணத்தால் இந்தச் சந்திப்பு ரத்துச் செய்யப்பட்டது.

எனினும், பொலிஸாருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சந்திப்பொன்று நடைபெற்றது.

இதில் வவுனியாவில் இடம்பெறும், சட்டவிரோத செயல்கள் காரணமாக வீதி ரோந்து நடவடிக்கைகளை அதிகரிக்கவுள்ளதால் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் போராளிகளையும் சோதனையிட வேண்டுமென பொலிஸார் தெரிவித்தனர்.

இதற்கு தமது ஆட்சேபனையை வெளியிட்ட வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ஞானவேல், வன்னியிலிருந்து வரும்போது தமது அரசியற்துறையினர் உடற் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுவருவதை சுட்டிக்காட்டினார்.

எனவே, வவுனியாவுக்குள் அவ்வாறான செயற்பாட்டை தாம் அனுமதிக்கப் போவதில்லை என அவர் தெரிவித்தார்.

இதேவேளை - இராணுவத்தின் பொறுப்புக்களில் மாற்றங்கள் நிகழ்வதன் காரணமாகவே படைத்தரப்பினர் நேற்றைய சந்திப்பில் பங்கேற்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.(01)

## ஈ.பி.டி.பி...

டபிள் ஒருவரும் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவத்தில் ஈ.பி.டி.பி.யின் பிரதேசத் தலைவர்களில் ஒருவரான சிவா என்ற அந்துணன் கந்தசாமி (வாழைச்சேனை), கிருஷ்ணசாமி கிருஷ்ணராஜா, முகமது சமி, மீராமுகைதீன் முசைதீன் ஆகிய ஈ.பி.டி.பி. உறுப்பினர்களும் பொலிஸ் கொன்ஸ்டபிளான நிரோஜனும் காயமடைந்ததாகத் தெரியவருகிறது.

காயமுற்ற அனைவரும் உடனடியாக வாழைச்சேனை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, பின்னர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தில் காயமுற்ற ஈ.பி.டி.பி. முக்கியஸ்தரான சிவா, கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை - இந்தத் தாக்குதலை இரண்டு மோட்டார் சைக்களில் வந்தவர்களே மேற்கொண்டதாக படை வட்டாரங்கள் தெரிவித்தன.

## அனைத்து...

இதனைத் தொடர்ந்து கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகமவை சந்தித்து இது தொடர்பாக கலந்துரையாடியபோதே, அவர் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் நாட்டிலுள்ள அனைத்துப் பட்டதாரிகளுக்கும் வேலைவாய்ப்பு வழங்கப்படவுள்ளதாகத் தெரிவித்தார்.

முதல் கட்டமாக 17,000 பட்டதாரிகளின் பெயர்கள் வெளியிடப்பட்டுள்ளதாகவும் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் ஏனைய பட்டதாரிகளின் பெயர் விபரங்கள் வெளியிடப்படும் என்றும் இத்தெரிவுகள் நியாயமான அடிப்படையிலேயே இடம்பெற்றதாகவும் தெரிவித்தார்.

மேலும் முதல் தொகுதி பட்டதாரிகளின் பெயர் வெளியிடப்பட்டாலும் அனைவருக்கும் ஒரே தினத்தில்தான் நிரந்தர நியமனம் வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

பட்டதாரிகளுக்கு ஆறு மாத காலம் ஆங்கிலப் பயிறசிகளும், 6 மாத காலம் கணினி பயிற்சிகளும் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவித்த நிதியமைச்சர், 15,000 பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனங்களே வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

# யாழ். பல்கலைக்கழக பஸ் மாணவர்களால் பூட்டப்பட்டது!

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்துக்குச் சொந்தமான பஸ்ஸை நேற்று மாணவர்கள் பூட்டிவைத்தனர்.

யாழ். பல்கலைக்கழக மூன்றாம் வருட மாணவர்களே இந்த பஸ்ஸை பூட்டி வைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தாம் கல்விச் சுற்றுலா செல்வதற்காக பஸ்ஸை கோரியபோது, அதனை வழங்க பல்கலைக்கழக நிர்வாகம் மறுத்தமையை எதிர்த்தே இந்த நடவடிக்கையை எடுத்துள்ளதாக மாணவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை மாணவர்கள் பஸ்ஸில் ஒட்டியுள்ள அறிவித்தலில், அவ்விடத்தை விட்டு பஸ் நகர்த்தப்படுமானால் பாரதூரமான விளைவை எதிர்நோக்க நேரிடுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவித்தலை ஒட்டிய மாணவர்கள் - நேற்று தனியார் பஸ் ஒன்றை வாடகைக்கமர்த்தி இலங்கை முழுவதற்குமான கல்விச் சுற்றுலா மேற்கொண்டு சென்றுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ப்)

## இடைக்கால நிர்வாகம்...

பிரதி வெளியுறவு அமைச்சர் விதார் ஹெல்கிசனின் கருத்துக்கும் இடையில் பாரிய வேறுபாடு காணப்பட்டமையை அடுத்தே தாம் அவ்வாறான கருத்தை கூறவேண்டி ஏற்பட்டதென தெரிவித்தனர்.

இந்த நிலையிலேயே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் தாம் ஒருபோதும் இடைக்கால நிர்வாகம் தொடர்பாக பேச்சுவார்த்தையை நடத்தத் தயாரெனக் கூறவில்லையெனக் குறிப்பிட்டார்.

இதனையடுத்து, இனிவரும் காலப்பகுதியில் இடைக்கால நிர்வாகம் தொடர்பாக அரசாங்கத்தின் சார்பில் மாத்திரமே கருத்துக்கள் வெளியிடப்படும் எனவும், தனியாக எவரும் கருத்துக்களை வெளியிடுவதில்லையெனவும் இந்தக் கூட்டத்தில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை - பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் நிகழ்ச்சிநிரலில் சரியான முறை பின்பற்றப்படவில்லையெனவும் ஜே.வி.பியினர் குற்றஞ்சுமத்தினர்.

இந்த முறையில் திறந்த நிலைக் கொள்கை அவசியம் எனவும் அவர்கள் வலியுறுத்தினர். (01)

## பேச்சுக்கான...

துள்ள இடைக்கால நிர்வாகம் தொடர்பான யோசனைகளில் சில சரத்துக்கு ஐக்கிய தேசியக் கட்சி இணங்கவில்லை.

ஆயினும், இந்த யோசனைகளை அடிப்படையாகக்கொண்டு சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தயாராக இருந்தது.

இடைக்கால நிர்வாக சபை யோசனைகளை அடிப்படையாகக் கொண்டு பேச்சுக்களை ஆரம்பிப்பதற்குத் தயார் என்று ஜனாதிபதியும் தெரிவித்திருந்தார்.

ஆயினும், ஜே.வி.பியின் பிரசாரச் செயலர் விமல் வீரவன்ச, அவ்வாறு பேச்சுவார்த்தை மேற்கொண்டால் கூட்டணி அரசாங்கம் முடிவடைந்துவிடும் என எச்சரித்திருந்தார்.

இவ்வாறான சூழ்நிலையிலேயே ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்குவதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்ததாகவும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

## இருபாலையில்...

விக்னராஜா, விசாரணைகளை மேற்கொண்டு வாக்குமூலங்களைப் பதிவு செய்தார்.

குறிப்பிட்ட கன்ரர் வாகனத்தைச் செலுத்திவந்த இளைஞரைப் பொலிஸார் கைது செய்ததுடன் கன்ரரையும் தடுத்துவைத்துள்ளனர்.

குறிப்பிட்ட கன்ரர் வாகனத்தைச் சாரதி செலுத்தாது பயிற்சி பெறும் இளைஞன் ஒருவர் செலுத்தி வந்தமை குறிப்பிடத்தக்கது. (லெ)

## பொறுப்புக்களை...

வுகளை ஜனாதிபதி சந்திரிகா பொறுப்பேற்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயலரான மைத்திரிபால சிறிசேனவின் ஆற்றுப்படுகை அமைச்சிடம் ஒப்படைத்திருந்தார்.

இதனையடுத்து, ஜனாதிபதிக்கும் ஜே.வி.பிக்கும் இடையில் பாரிய முறுகல்நிலை ஏற்பட்டிருந்தது. இதன் காரணமாக அண்மையில் ஜனாதிபதி சந்திரிகா தாய்லாந்து சென்றபோது, அவருடன் கூடச்செல்வதாகத் திட்டமிட்டிருந்த ஜே.வி.பியைச் சேர்ந்த அமைச்சின் அநுரகுமார திஸ்ஸநாயக்க தனியாகவே சென்று பிம்டெக் மாநாட்டில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (01)

## பாலியல்....

குறித்த பெண் எழுப்பிய அபயக் குரலை அடுத்து கடற்படைச் சிப்பாய் தாம் கொண்டுவந்திருந்த சைக்கிளையும் விட்டுத் தப்பியோடினார்.

இதன்பின்னர் - தான் விட்டுச் சென்ற சைக்கிளை எடுப்பதற்காக சீருடையுடன் ஆயுதம் எடுத்துச் சென்ற குறித்த சிப்பாய், அதிகாலை நடைபெற்ற சம்பவம் தொடர்பாக எவருக்கும் தெரியப்படுத்தக்கூடாது என்று எச்சரிக்கை செய்ததுடன், அந்தச் சைக்கிளையும் எடுத்துச் சென்றார்.

இதன்பின்னர் - குறித்த வீட்டுக்குச்சென்ற பத்துக்கு மேற்பட்ட கடற்படையினர் சம்பவம் பற்றி விசாரித்ததுடன், குறித்த சம்பவத்தில் ஈடுபட்ட சிப்பாய் தங்களுடன் இருக்கின்றாரா என்றும், அவரை அடையாளம் காட்டுமாறு கோரியிருந்தனர்.

குறித்த நபர் அவர்களுடன் இல்லையெனக் கூறியதையடுத்து கடற்படையினர் அங்கிருந்து சென்றனர்.

இது தொடர்பாக விடுதலைப் புலிகளின் அரசியற்துறை அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. (52)

நமது ஈழநாடு தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழின்
கிளிநொச்சிப் பணிமனை
தன் சேவையை ஆரம்பித்துள்ளது
வாசகர்களே... வர்த்தகப் பெருமக்களே... படைப்பாளிகளே
மற்றும் பல்துறை சார்ந்த அமைப்புக்களே...
உங்கள்
செய்திகள் - விளம்பரங்கள் - அறிவித்தல்கள் மற்றும் விநியோகம்
தொடர்பான அனைத்திற்கும் ஏனைய தொடர்புகளுக்கும்...
ஏ-9 நெடுஞ்சாலை, கிளிநொச்சி

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 04.08.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.